ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாசி - மார்கழி
செப்டம்பர் - டிசம்பர் 2018



கஜா புயல் பாதிப்புக்குள்ளான திருவாரூர் மாவட்டம் கொக்கலாடி கிராமத்தில் நிவாரணப்பணியில் நமது குருமகாசந்நிதானம்.
நாள் : 08-12-2018.

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



பேரூர் சீர்வளர்சீர் **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்** அவர்கள்
31-08-2018 அன்று சுத்தாத்துவித இட்டலிங்க ஐக்கிய
பரசிவக் கலப்பு எய்தினார்கள்.
மக்கள் சிந்தனையின் அஞ்சலி

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2049 மாதம் : புரட்டாசி - மார்கழி
மலர் : 32 இதழ் : 9 - 12

புத்தாண்டே, அன்பைச் சுமந்து வா!

புத்தாண்டு மலர்கிறது. புதிய சிந்தனைகள், புதிய எண்ணங்கள், புதிய திட்டங்கள் புத்தாண்டில் நம்மை வரவேற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் கடந்த காலத்தின் கசப்புகள், காயங்கள், கண்ணீர்த் துளிகள், வெடித்துத் சிதறுகிற கோபக் குப்பைகள் நம்மிடமிருந்து விடைபெற வேண்டும். நாம் ஒவ்வொரு புத்தாண்டு அன்று உறுதிமொழி எடுப்போம். அதிகாலை எழுவோம். ஆண்டவனைத் தொழுவோம். உடற்பயிற்சி செய்வோம். நல்ல நூல்களைக் கற்போம். புதிய செயல்திட்டங்கள் வகுப்போம் என்றெல்லாம் உறுதிமொழி எடுப்போம். மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்களோ மதுப்பழக்கத்தை விட்டுவிடுவதாக உறுதி எடுப்பர். புகைபிடித்தலுக்கு அடிமையானோர் புகைபிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடுவதாக உறுதி எடுப்பர். எல்லா உறுதிமொழிகளும் பெரும்பாலும் காற்றில் கரைந்த கற்பூரமாய், தண்ணீரில் எழுதிய எழுத்துக்களாய் புத்தாண்டு தினத்தோடு விடைபெற்று விடும். எண்ணிப் பாருங்கள்.

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?

என்று பாரதி சொல்வான்.

சராசரி மனிதக் கூட்டத்துக்குள் நான் என் வாழ்க்கையை முடித்து விடுவேனா? சராசரிகளைப் போல் என் வாழ்வு முடிந்து விடுமா? எப்படி என் வாழ்வு இருக்க வேண்டும்? பொங்கி எழுகிறான் பாரதி. "என்னைப் புதிய உயிராக்கு" என்று சொல்கிறான். நேற்று நான் செய்த தவறுகள் என்னோடு இல்லாது போகட்டும். நான் புதிய மனிதனாய், புதிய பிறவி எடுக்க வேண்டும். என்னைப் புதிய உயிராக்கு என்று மன்றாடுவான். நாளும் நம்மைப் புதியவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். எப்படிப் புதியவர்களாக ஆக்கிக் கொள்வது?

கடந்த காலத்தில் நாம் சந்தித்த காயங்கள், கசப்புகள், கண்ணீர்த் துளிகள் விடைபெறட்டும். எவர் மீதும் எதன் மீதும் வெறுப்புக் கொள்ளத் தேவையில்லை. பிறரை எப்போதும் நேசிப்பவர்களாக நாம் மாற வேண்டும்.

இளங்கோவடிகள் இயற்கையைப் போற்றினார். இறை வாழ்த்தைப் போற்றித் துவங்குவதே காவிய மரபு. அதன் எல்லைகளைத் தாண்டி இயற்கையைப் போற்றி தன் காவியத்தைத் தொடங்கினார். திங்களைப் போற்றினார். ஞாயிறைப் போற்றினார். மாமழையைப் போற்றினார். இயற்கையைப் போற்றி வாழ்ந்த வாழ்வு இன்று என்னவாயிற்று? இயற்கையோடு எதிர்த்து நடத்திய எதிர்த் தாக்குதல் மனித குலத்தை வீழ்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்கின்றது. எண்ணிப் பாருங்கள்.

மனிதன் முதலில் சொந்த வீட்டின் சொந்தச் சகோதரர்களோடு சண்டையிட்டான். அடுத்து அண்டை வீட்டுக்காரனோடு சண்டையிட்டான். பிறகு தெருவில் சண்டையிட்டான். ஊர்களோடு சண்டையிட்டான். நாடுகளோடு சண்டையிட்டான். இப்போது உலகத்தோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கிறான். இந்தச் சண்டைகளின் பாதிப்புகள் ஓரளவே. ஆனால் எல்லாச் சண்டைகளையும் மிஞ்சுகிற அளவில் இயற்கையோடு அவன் நடத்திய தாக்குதல் மனிதகுலத்தைத் தற்கொலைப் பாதைக்கு அழைத்துச் செல்வதாக இருக்கிறது. இயற்கையோடு இணைந்து, இயற்கையோடு இசைந்து வாழ்கிற வாழ்க்கை இன்று இருக்கிறதா?

கஜா புயலின் படையெடுப்பு இன்று எதைக் காட்டுகிறது? நாம் இயற்கையை விட்டு விலகி விட்டோம். இயற்கையை எதிரியாகப் பாவித்து விட்டோம். இயற்கையோாடு சண்டையிட்டு நம் வாழ்க்கை சென்று கொண்டிருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது.

அதனால்தான் சங்கக் கால இலக்கியப் புலவன்,

"ஓரில் நெய்தல் கறங்க, ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூவணி அணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்,
படைத்தோன் மன்ற, அப்பண்பிலாளன்
இன்னாது அம்ம, இவ் வுலகம்;
இனிய காண்க, இதன் இயல்புணர்ந் தோரே!"

என்றான். என்ன இதன் பொருள்?

ஒரு புறத்தில் அழுகை ; ஒரு புறத்தில் மகிழ்ச்சி; ஒரு புறத்தில் துன்பம், துயரம் சோகம் இன்னொரு புறத்தில் மகிழ்ச்சி, ஆரவாரம், ஆர்ப்பரிப்பு, ஏன் இருவேறு நிலைகள்? இந்த உலகத்திற்குள் ஏன் இருவேறு துருவங்கள்? இருவேறு நிலைகளில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே? துன்பத்தை இன்பமாக்கு; சோகத்தைச் சுகமாக்கு. அழுகையை ஆனந்தமாக்கு; இன்னாத உலகத்தை இனியதாக ஆக்கிக் காட்டு என்று சொன்னான் பழந்தமிழ் புலவன். அதற்கு என்ன வழி?

"கைவருந்தி உழைப்பவர் தெய்வம் என்று நம்பு" என்று பாரதி சொன்னான்.

துன்பத்தை எப்போது இன்பமாக மாற்ற முடியும்? உழைப்பால் மட்டும்தான் முடியும். உழைத்துக் காய்த்துப்போன ஒருவரின் கரங்களை கைகளில் பற்றிக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டு கண்ணீர் விட்டார் நபிகள் நாயகம். "உழைத்துக் காய்த்துப்போன கரங்களிலே நான் இறையருளைக் காண்கிறேன்" என்றார்.

வைகை ஆற்றங்கரையில் வெள்ளப் பெருக்கு எடுத்தபோது, வீட்டிற்கு ஒருவர் வேலை செய்ய வரவேண்டும் என்று மன்னன் ஆணையிட்டான். அப்போது அந்தக் குடிமராமத்துப் பணியை

நிறைவேற்ற உலகத்தின் தலைவன் சிவபெருமான் கூலியாளாய் வருகிறான். மண்வெட்டியைத் தோள்களிலே தூக்கிக்கொண்டு மண் சுமக்கிறான். அவன் பொன்மேனி புண் சுமக்கிறது.

சிறிது நேரம் அவன் மண் வெட்டியை எடுத்து வேலை செய்யவில்லை. வேலை செய்யாத காரணத்தால் மன்னன் அவனை பிரம்பால் அடிக்கிறான். அடித்த அடி அனைவருக்கும் விழுகிறது. எதற்காக? எல்லோரும் உழைக்க வேண்டும். உழைக்க எவர் மறந்தாலும், மறுத்தாலும் அவருக்குத் தண்டனை உண்டு என்பதை உழைப்பின் மகத்துவத்தை உலகத்தின் தலைவன் இந்த மண்ணிலே நிகழ்த்திக் காட்டுகிறான். அது மட்டுமல்ல. அவன் யாருக்கு தன்னைக் கூலியாளாய் அமர்த்திக் கொண்டான்? ஒரு ஆதரவற்ற மூதாட்டிக்கு - வந்திக் கிழவிக்கு - யாருமற்ற அநாதையாக இருந்த ஒரு அபலைக் கிழவிக்குத் தன்னைக் கூலியாளாய் அமர்த்திக் கொள்கிறான். யாருக்கு நாம் உழைக்க வேண்டும். எந்த வகையிலும் வாய்ப்பற்ற, வசதியற்ற திக்கற்றோருக்கு உதவ வேண்டும் என்பதுதான் அவன் நடத்திய திருநிகழ்வின் அடையாளம்.

அதைப் போலத்தான் ஞானிகள், அடியார் பெருமக்கள், திருநாவுக்கரசர் பெருமானும், திருஞானசம்பந்தப் பெருமானும் தமிழ்பாடி இந்த உலகத்தைச் செழிக்கச் செய்தார்கள். நாளும் நற்றமிழால் இசைபாடி இறைவனை அடைவதற்கு வழிகாட்டினார்கள். அவர்களின் பணியைக் கண்டு அவர்களுக்குப் பொற்காசுகளை வழங்கினான். எதற்கு? அந்த அடியார் பெருமக்களுக்கு அல்ல. அந்த அடியார் பெருமக்கள் மக்கள் நலப்பணி ஆற்றுவதற்காக, பஞ்சம் நீக்குகிற பணி செய்வதற்காகத் தான். ஞானசம்பந்தப் பெருமானுக்கும், நாவுக்கரசர் பெருமானுக்கும் இறைவன் பொற்காசுகளை வழங்கினான்.

அந்தப் பொற்காசுகளை கடைக்குச் சென்று பொருளாக மாற்றுகிறபோது, திருநாவுக்கரசர் பெருமானின் பொற்காசுகளுக்கு உடனடியாகப் பொருள் கிடைத்துவிடுகிறது. திருஞான சம்பந்தப் பெருமானின் பொற்காசுகள் பண்டமாக, பொருளாக மாற்றுவதற்கு சிறிது நேரம் தாமதப்படுகிறது. என்ன காரணம்? என்று இறைவனிடம் விண்ணப்பித்தபோது, திருநாவுக்கரசர் செய்த கைத்திருத்தொண்டுக்

கடப்பாட்டிற்காக அவருக்கு மாசில்லா மாற்றுக்குறையாப் பொற்காசுகள் வழங்கினோம் என்று இறைவன் சொன்னானாம். எனவே தொண்டை இறைவன் நேசித்தான் என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஒரு செல்வச் சீமான் தன் மகன் உலக வாழ்க்கையின் பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும். வாழ்வியல் துன்பங்களை அவன் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார். அந்தச் செல்வச் சீமான் தன்னிடம் இருக்கிற தொழிற்சாலைக்கு, தோட்டத்திற்கு மேற்பார்வை செய்யத் தன் மகனுக்கு வாய்ப்பளிக்காமல் தனக்குத் தெரிந்தவரிடம் பணிக்கு அமர்த்தினார். ஓராண்டு காலம் அவர் மகன் அவர் நண்பரிடம் பணி செய்தான். ஆனால், அவர் நண்பர் செல்வச் சீமானின் மகனுக்கு அதிக வேலை தராமல், எந்த ஒரு வேலைக்கும் பயிற்சி தராமல் ஓராண்டு கழித்து ஒரு பொற்காசைக் கொடுத்து அனுப்பி வைத்து விட்டார். பொற்காசைப் பெற்று அப்பாவிடம் மகன் கொடுத்தான். அப்பா அந்தப் பொற்காசை வாங்கித் தூக்கி எறிந்தார். எதுவும் பேசவில்லை. அடுத்த ஆண்டு ஒரு புதிய நண்பரிடம் அனுப்பி வைத்து அந்த நண்பரிடம் வேலை பழகச் சொன்னார்.

அந்த நண்பரும் இவன் பெரிய பணக்காரரின் மகன். இவனுக்கு நாம் எப்படி வேலை தருவது என்று வேலை தராமலே ஓராண்டு வைத்து விட்டு ஒரு பொற்காசு கொடுத்து அனுப்பி வைத்தார். அப்பாவிடம் சென்று மகன் தங்கக் காசை நீட்டினான். அப்போதும் அப்பா அதை அலட்சியமாகத் தூக்கி எறிந்தார். மகனும் அமைதியாக இருந்தான். அடுத்த ஆண்டு யாரென்று தெரியாத ஒருவரிடம் மகனை வேலைக்கு அனுப்பிவிட்டார். தெரியாத இடத்தில் வேலைக்குச் சேர்ந்த அவனை அந்த முதலாளி மிகவும் கஷ்டப்படுத்தினார். எல்லா வேலைகளைச் செய்வதற்கும் அவனைப் பழக்கப்படுத்தினார். அதனால் அவன் தன்னை வளர்த்துக் கொண்டான். இப்போதும் ஆண்டு முடிவில் அவன் முதலாளி அவனுக்கு ஒரு பொற்காசைக் கொடுத்தார். அப்பாவிடம் அந்தப் பொற்காசைக் கொடுத்தான். தூரத்தில் வரும்போதே மகன் நன்கு உழைத்துப் பாடம் கற்றுக் கொண்டு வந்திருக்கிறான் என்று அப்பா தெரிந்து கொண்டார். அப்பா கையில் பொற்காசைக் கொடுத்த உடன், அப்பா தூக்கி எறியப் போனார். மகனுக்கு வந்தது கோபம், அப்பாவின் கையைப் பிடித்துத் தடுத்து, "உங்களுக்கென்ன பைத்தியமா?" என்று கேட்டான்.

மகனைத் தட்டிக் கொடுத்து உழைத்துப் பெறுகிற ஊதியம் தான் உன்னதமானது என்று அறிவுரை சொல்லி அந்தப் பொற்காசை அவன் பையில் போட்டார். எல்லா ஊதியத்திலும் வியர்வையின் வழியே பெறுகிற ஊதியம்தான் உயர்ந்த ஊதியம். அதைத்தான் இளைய தலைமுறை தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், நம் நாட்டில் இன்னமும் ஏழைகள் இருக்கிறார்கள். வறியவர்கள் இருக்கிறார்கள். இவர்களின் மனப்போக்கு ஏன் வறுமையை, ஏழ்மையை எதிர்த்துப் போராடாமல் இருக்கிறது? என்பது சிந்தனைக்குரியது. ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ நிறுவனம் பின்தங்கிய நாடுகளில் மக்களின் மனப்போக்கு ஏன் இப்படி இருக்கிறது என்று ஒரு ஆய்வை நிகழ்த்தியது. அந்த ஆய்விற்கு அடித்தளமாக ஒரு மூன்று தட்டுக்களை வடிவமைத்து ஒரு தட்டில் அதிக உணவும், ஒரு தட்டில் குறைந்த உணவும், ஒரு தட்டு வெறுந்தட்டாகவும் வைத்து அவை ஒவ்வொன்றிலும் எலிகளை வைத்தார்கள். அதிக உணவு இருந்த தட்டிலும், வெறுந்தட்டிலும் எந்த மாற்றமும் இல்லை. எதில் குறைந்த உணவு இருந்ததோ அங்கே எலிகள் ஒன்றையொன்று சண்டையிட்டுக் கொண்டன; கடித்துக் கொண்டன. கடிபட்ட எலிகள் என்று எலிகளில் வர்க்கம் தோன்றியது. இப்போது கடிபட்டு பாதிக்கப்பட்ட எலிகளை வெறுந்தட்டிலே வைத்தார்கள். அங்கே வசிக்க அந்த எலிகளுக்கு விருப்பம் இல்லை. பாதிக்கப்பட்ட எலிகளை அதிக உணவு உள்ள தட்டில் வைத்தார்கள். அங்கே வசிக்கவும் அந்த எலிகளுக்கு விருப்பம் இல்லை. கடிபட்டு, காயப்பட்ட அந்த எலிகள் அவை கடிபட்டு பாதிக்கப்பட்ட குறைவான உணவு உள்ள இடத்திற்கு வந்து வசிக்கவே விரும்பின. இப்படித்தான் பின்தங்கிய நாடுகளில் மக்களின் மனநிலை. ஏழ்மையை, வறுமையை மாற்ற அவர்கள் முயற்சிப்பதில்லை. அதற்கு விதியைக் காரணம் காட்டி முடங்கிப் போகிறார்கள். மனித முயற்சி விதியின் விளைவு என நினைத்து முடக்கப்படுகிறது என்று ஆய்வின் முடிவில் சொல்லப்படுகிறது.

இதைத்தான் நம்முடைய இலக்கியங்கள் தெள்ளத் தெளிவாகச் சொல்கின்றன. கம்பனின் இராமகாவியத்தில் இதுதன் விதியின் விளைவு என்று இராமன் தனக்குத் துன்பம் ஏற்பட்டபோது இலக்குவனுக்குச் சொல்வான். "விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி" என்று

இலக்குவன் கோபம் கொப்பளிக்கச் சொல்வான். ஆக, விதியை மாற்றக்கூடியது என் வில் வன்மை என்று அவன் சொன்னான். அது மனித முயற்சியினுடைய நிலைப்பாடு. இதைத்தான் துன்ப நீக்கத்தில் இருந்து விடைபெறாத மக்களைப் பார்த்து, அவ்வினைக்கு இவ்வினை காரணம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, இந்தத் துன்ப நீக்கத்திற்கு இந்த வினையை மாற்றுவதற்கு ஏன் நீங்கள் கைவினை செய்யக்கூடாது என்றும், உங்கள் கடமையைச் செய்யுங்கள் என்றும், உங்களிடமிருந்து துன்பம் நீங்கி விடைபெற்று விடும் என்றும் ஞானசம்பந்தப் பெருமான் சொல்வார். அந்த நிலையை இன்று மனித சமூகம் உணர்கிறதா? எண்ணிப் பாருங்கள்.

இப்பொழுதெல்லாம் ஆண்டவனின் ஆலயங்களில் வேறுபாடு. எப்படி இருக்கிறது? ஒரு சில திருக்கோயில்களின் உண்டியல்களில் காணிக்கை நிரம்பி வழிகிறது. வேறு சில திருக்கோயில்களிலோ அன்றாடப் பூசைக்கே தடுமாற்றம். என்ன காரணம்? கடவுள்தான் ஏழையை, பணக்காரனைப் படைக்கிறான் என்று மனிதன் நினைக்கிறான். ஆனால் இந்த மனிதன் கடவுளையே ஏழைக் கடவுளாகவும், பணக்காரக் கடவுளாகவும் மாற்றிவிடுகிறான். கடவுள் நம்முடைய சோர்ந்து போகிற பொறிகளுக்கு, புலன்களுக்குப் புத்துணர்ச்சியை தருகிறவர், களைத்துப் போகிற மனங்களுக்கு ஆறுதலை, தேறுதலைத் தருகிறவர். உழைக்க மறுக்கிற, மறக்கிற மக்களுக்கு ஊக்கத்தை, உற்சாகத்தைத் தருகிறவர். அந்த நிலையில் தான் சோர்கிற பொறிகளுக்கும், புலன்களுக்கும் நம்பிக்கை தருவதுதான் இறைமையின் ஆற்றல் என்பதை நாம் உணர வேண்டும். அதைத்தான்,

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்று திருவள்ளுவர் சொன்னார்.

அதைத்தான் பாரதி, விநாயகரிடம் மன்றாடிக் கேட்பான். எப்படி?

மண்மீ துள்ள மக்கள், பறவைகள்
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்
யாவுமென் வினையா லிடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புட் னிணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா!

என்று பாரதி சொன்னான்.

என்னுடைய செயலால், என்னுடைய மனித முயற்சியால் துன்பம் நீங்க வேண்டும். அதற்கு நீ அருள்புரிய வேண்டும் என்று பாரதி வேண்டினான். இறைநம்பிக்கையும், மனித முயற்சியும் இணைந்து பயணம் செய்வது தான் உண்மையான ஆன்மீகத் தடம் என்றான் பாரதி. அதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆங்கிலத்தில், SMART என்று சொல்வார்கள். SMART என்பதன் விளக்கம் என்ன?

SYSTEMATIC (பணியின் செயல்திட்டம்)
MEASURABLE (பணிப்பயனின் அளவீடு)
ADMIRABLE (அப்பணியினால் கிடைக்கிற பாராட்டு)
REJOICE (அப்பணியினால் கிடைக்கிற மகிழ்ச்சி)

இவற்றுக்கெல்லாம் மேலாக

TIME BOUND (பணியினை செய்வதற்கான கால வரையறை)

இந்த ஐந்தும் ஒருங்கிணைந்தால் தான் அந்தச் செயல் வெற்றி பெறும். அதற்குப் பெயர் தான் SMART. ஒரு பணியைக் கடமைக்காகச் செய்வதல்ல. ஈடுபாட்டுடனும் மகிழ்வோடும் செய்ய வேண்டும்.

சேக்ஸ்பியர் கவிதை எழுதியதைப்போல, மைக்கேல் ஏஞ்சல் ஓவியம் தீட்டியதைப்போல, பீத்தோவான் இசையமைத்ததைப்போல நாம் எந்தப் பணியையும் மிக நேர்த்தியாகச் செய்யவேண்டும் என மார்ட்டின் லூதர் கிங் சொல்வார். ஒரு அறையைத் தூய்மை செய்கிற பணியாக இருந்தாலும் நாம் மகிழ்வோடும், ஈடுபாட்டோடும் செய்ய வேண்டும். அப்படிச் செய்கிறபோதுதான் நம் பணி சிறக்கும்.

ஆன்மிகத் தடத்தில் நம் அடிகள் பெருமான் பணியாற்றுபவர்களுக்கு - கடமையாற்றுபவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருவார்கள். புத்தாண்டு வந்தால் அனைவரும் ஆவலோடு காத்திருப்பார்கள். கடைநிலை ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள் என அனைவருக்கும் புதிய (DAIRY) நாட்குறிப்பேடு வழங்குவார்கள். அது ஆங்கில சம்பிரதாயப்படி வழங்குவதல்ல. எல்லாக் குறிப்பேடுகளிலும் கடைநிலை ஊழியர் குறிப்பேட்டிலும் கடந்த ஆண்டு அவரின் பணி எப்படி இருந்தது? வரும் ஆண்டில் எப்படி இருக்க வேண்டும் என்ற வழிகாட்டுதல் இருக்கும் . ஆக,

நாட்குறிப்பேடு பெறும் ஒவ்வொருவரும் அதை வேதப்புத்தகமாகப் பெறுவார்கள். காலையில் எழுந்தவுடன் அந்தக் குறிப்பைத்தான் வாசிப்பார்கள். கடந்த ஆண்டு செய்த பணியைவிட, இந்த ஆண்டு என் பயணி உயரச் செல்ல வேண்டும். உன்னதாமாக இருக்க வேண்டும் என்று சிரத்தையோடு பணியாற்றுவார்கள். நாட்குறிப்பேடு வழங்குவது ஒரு பரிசு அல்ல. நம் பணியின் திட்டம். கடமையின் களம். அந்தப் பணியை மகாசன்னிதானம் தன் வாழ்நாள் வரை பணியாளர்களிடமும், இளைஞர்களிடமும், கிராம மக்களிடமும் ஆற்றிவந்தார்கள்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு".

நேற்று இருந்தவர் இன்று இல்லை. ஆனால், நேற்று இருந்தவர் ஆற்றிய செயல்களின் பயன்கள் இன்று இருக்கிறது என்று திருவள்ளுவர் சொல்வதைப்போல, வாழ்க்கை தொடர வேண்டும்.

நான் முடிந்தவற்றைப் பற்றி ஒருபோதும் நினைப்பது இல்லை. அடுத்து என்ன செய்யப்பட வேண்டும் என்பதைத்தான் சிந்தனை செய்வேன் என்று புத்தர் பெருமான் சொன்னார்.

நாம் எவ்வளவு வேலை செய்கிறோம் என்பதைவிட, அந்த வேலையை எவ்வளவு சிறப்பாகச் செய்கிறோம் என்பதுதான் கடவுளை நாம் குளிர்விப்பது என்று காந்தியடிகள் சொல்வார்.

வேலையின் அளவு அல்ல நம் பணியின் நோக்கம். அந்த வேலையைச் சிறப்பாகச் செய்வதே அந்தப் பணியின் பெருமை, என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கஜா புயல் நம்மைப் புரட்டிப் போட்டுவிட்டது. எத்தனை இயற்கையின் பேரிடர்கள்? சுனாமி தொடங்கி இன்று வரை புயலின் தாக்குதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே நம்முடைய நிர்வாகத்தில் உள்ள நம் பள்ளியின் வகுப்பறைகள் சேதமடைந்துவிட்டன. அங்கு பார்வையிடச் சென்றபோது, மக்களின் அவல நிலையைப் பார்க்க நேர்ந்தது. ஏறத்தாழ 20 நாட்களுக்கும் மேலாக மின்சாரம் கிடைக்காமல்,

குடிநீர் கிடைக்காமல் அல்லல்படும் மக்கள். அந்தப் பகுதியில்தான், பாமணி என்ற கிராமத்தில் "மகராஜா பேக்கரி" என்ற பெயரில் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் இனிப்பகங்கள் நடத்துகிற சீனு சின்னப்பா என்ற மகத்தான மனிதர் தன் உடல் நலிவுற்ற போதிலும் உள்ளம் தளராமல் ஏழைகளுக்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார். திருத்துறைப்பூண்டி அருகே உதவிகளைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார். திருத்துறைப்பூண்டி அருகே தாம் பிறந்த பாமணி கிராமம் உள்பட 15 கிராமங்களுக்கு பல லட்சங்கள் செலவில் பொருட்களை நிவாரணமாக வழங்கி உள்ளார். அதுபோல புதுக்கோட்டை மாவட்டத்தில் பல கிராமங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கியுள்ளார். பாமணி என்ற கிராமத்தில் விவசாயத்தோடு தொடங்கிய வாழ்வு இன்று இனிப்பகத்தின் உதவியால் இனிப்பாய் மாறியிருக்கிறது. அவர் ஏழை மக்களுக்கு இனிப்பாய் இருக்கிறார். அப்போது அவரது சொந்தத் துயரச் செய்தி. அவரது சகோதரியின் மகன் இயற்கை விவசாய ஆர்வலர் "நெல் ஜெயராமன்" அவர்கள் மறைந்துவிட்ட அடுத்த நாளிலும் மக்களுக்கு நிவாரணப் பணிகளைத் தொடர்ந்தார். தன் சொந்தச் சோகத்தை மறந்துவிட்டு, ஏழை மக்களுக்கு அவர் நிவாரணப் பணிகளைச் செய்கிறபோது, அந்த மக்கள் கண்களால், கரங்களால் நன்றி தெரிவிக்கிறபோது நிவாரணப் பணிகளை இப்படி அவர் ஈடுபாட்டுடன் செய்கிறாரே என்று நாம் வியந்து நெகிழ்ந்து போனோம்.

அந்த நிவாரணப் பணிக்காக நம்மோடு வந்தவர் திருவாரூரைச் சேர்ந்த மைதீன் கோவிந்தராஜன், 1992இல் தண்டியடிகள் அறக்கட்டளை என்ற மக்கள் இயக்கத்தின் வாயிலாக பொதுநலப் பணியாக நம் மகாசந்நிதானத்தின் தலைமையில் திருவாரூர் கமலாலயத்தில் தூய்மைப் பணி செய்தவர். சுனாமி நிவாரணப் பணிகளின்போதும் நம்மோடு தோளோடு தோள் கொடுத்துப் பணி செய்தவர். ஆதரவற்ற பிணங்களை அகற்றுவதற்கு உதவி செய்தவர். அவர் தற்போதும் நம்மோடு ஏழை மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். ஈரோட்டில் இருந்து அருள்நெறித் திருக்கூட்ட அன்பர்கள், அ. திருநாவுக்கரசு, செந்தூர் பெரியசாமி, முருகேசன் மற்றும் வெங்கடாசலம் ஆகியோர் ஆன்மீகப் பணி, கல்விப் பணி மட்டும் செய்பவர்கள் அல்ல. பொதுநலப் பணியும்

செய்பவர்கள் என நிரூபித்தார்கள். இரவு முழுவதும் உண்ணாமல், உறங்காமல் பயணித்து அவர்கள் வழங்கிய நிவாரணப் பொருட்கள் ஏராளம். ஏழை மக்களின் கண்ணீரைத் துடைத்த இப்படிப்பட்ட அன்பர்களின் பணி என்றைக்கும் தேவைப்படுகிறது.

ஆலயங்களில் செய்வது மட்டுமல்ல புண்ணியப் பணி. அன்னதானம் மட்டுமல்ல புண்ணியப் பணி. பாதிப்புக்குள்ளான ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைப்பதுதான் புண்ணியத்திலும் புண்ணியம். அந்தப் புண்ணியத்தைச் செய்கிற புண்ணிய சீலர்கள் நமக்குத் தோழமையாக இருப்பது தான் நாம் பெற்ற பெரும்பேறு. இந்த நேரத்தில் கஜா புயல் நிவாரணப் பணியாற்றியவர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். வார்த்தைகளால் அல்ல; வாழும் வாழ்க்கையால் தான் நன்றி சொல்ல முடியும்.

ஒரு மன்னர் ஒரு போட்டியை அறிவித்தார். அமைதிக்கான விருது வழங்குவதற்கு ஒரு ஓவியத்தை வரைந்தால், எந்த ஓவியம் அமைதிக்கான அடையாளமாக விளங்குகிறதோ அந்த ஓவியத்திற்குப் பரிசு வழங்குவதாக அறிவித்தார். அவர் அறிவித்தவுடன் பல ஓவியங்கள் போட்டியில் கலந்து கொண்டன. அவற்றில் இரண்டு ஓவியங்கள் நிறைவாக மன்னரின் பார்வைக்கு வந்தன. அமைதியான ஏரி. அந்த ஏரியில் பிரதிபலிக்கிற உயரமான மலை. மலையைச் சுற்றிலும் பசுஞ்சோலை. தெளிந்த நீல வானம். வெண்மேகங்கள் அப்படியே அமைதியைத் தந்த பூரண ஓவியமாய்க் கண்களுக்குத் தெரிந்தது. மன்னர் அதைப் பார்த்துவிட்டு அடுத்த ஓவியத்தைப் பார்த்தார். அடுத்த ஓவியத்தில் மலைகள் இருந்தன. மரங்கள் இல்லை. வெறும் கந்தகக் காடு போல மரங்கள் இல்லாமல் மலை தெரிந்தது. அந்த மலைக்குக் கீழே வானம் மின்னல் தெறிக்கக் கோபக் கனலோடு தெரிந்தது. பேரிரைச்சலோடு அருவி கொட்டிக் கொண்டிருந்தது. அந்த அருவிக்கும், அருவியின் இரைச்சலுக்கும், அந்த மலைக்கும் எந்த ஒரு அமைதியின் தொடர்பே இல்லை. ஆனால், மன்னர் அந்த ஓவியத்தை ஆழமாக உற்றுப் பார்த்தார். பேரிரைச்சலாய்க் கொட்டுகிற அருவிக்குப் பின்னே மலையின் பாறையில் ஒரு பிளவு இருந்தது. அந்தப் பிளவில் ஒரு புதர் இருந்தது.

அதில் ஒரு தாய்ப்பறவை கூடு கட்டி இரண்டு குஞ்சுகள் இருந்தன. விண் பிளந்து விழும் அளவிற்கு ஒலிக்கும் அந்த அருவிக்குப் பின்னால் இருந்த அந்தப் பறவைக் கூட்டில் சலனமற்று பூரண அமைதியோடு இரண்டு குஞ்சுகளும் இருந்தன. ஒருபுறத்தில் இயற்கையின் எழிலோவியம். ஒருபுறத்தில் கொட்டும் அருவிக்குப் பின்னே புதருக்குள்ளே மரப்பொந்தில் இரண்டு குஞ்சுகள். அந்தக் குஞ்சுகள் இரைச்சலைப் பற்றிக் கவலைப்படவில்லை. அமைதியின் ஆனந்தத்தில் இருந்தன. அந்த ஓவியம் மன்னரைக் கவர்ந்தது. பரிசுபெற்றது.

ஆக, அமைதி என்பது புறச்சூழலில் இல்லை. இதயத்தின் ஆழ்ந்த உணர்வுகளில் இருக்கிறது என்பதைத்தான் அது காட்டுகிறது. அதனால் வாழும் தலைமுறை புதிய ஆண்டில் பூரண அமைதியைச் சிந்திக்க வேண்டும். மகிழ்ச்சியை ஆனந்தத்தைச் சிந்திக்க வேண்டும். அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

இயற்கையிடம் நாம் மண்டியிட்டு பிரார்த்திப்போம்.

“நித்தம் நித்தம் புதுப்புதுப் பெயர் சூட்டிக்கொள்ளும் புயற்காற்றே! இந்தப் புத்தாண்டில் மண்டியிட்டு உன்னிடம் மன்றாடுகிறோம். இனியேனும் எளிய மக்களின் மீதான உன் தாக்குதலை நிறுத்து. வாழ்க்கை ஒரு அழகிய ஓவியம். அதைக் கலைத்துவிடாதே. வாழ்க்கை தீட்ட வேண்டிய ஒரு அழகிய காவியம். அதை உன் வேகக் காற்றால் அழித்துவிடாதே. உன்னை எதிர்க்க எங்களிடம் ஆயுதங்கள் இல்லை. உன் தாக்குதலால் தடுமாறி நிற்போர் சிந்தும் கண்ணீர்த் துளிகளைத் துடைக்கும் கருணைக் கரங்களும் உதவும் அன்பு இதயங்களுமே எங்களிடம் உள்ளன.

புயலைக் கடந்து வரும் புத்தாண்டே,

ஆதரவுக் கரம் நீட்டி அன்பைச் சுமந்து வா...!

புத்தாண்டே அன்பைச் சுமந்து வா....!

பொன்னம்பல அடிகளார்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

போற்றி! அருளுக!

கடவுளை, தமிழில் "போற்றி! போற்றி! என்று வாழ்த்துதல் மரபு. போற்றி – என்ற சொல்லிற்கு, "போற்று" என்றும் பொருள் கொள்ள இயலும். போற்றி என்ற சொல்லில் உள்ள இகர ஈற்றை வியங்கோள் எனக் கொண்டால் "போற்று" என்றாகும். "போற்றுக" என்ற சொல்லுக்குக் "காப்பாயாக" என்பது பொருள். இடம் நோக்கிப் பொருள் கொள்ள வேண்டும்.

"போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்" என்ற தொடரில் "போற்றி" வினையெச்சம். இறைவன் எப்பொருளுக்கும் முதலாக விளங்குபவன். "வாழ் முதலே!" என்றும் அருள்வது காண்க! இந்த உலகத்தின் – உலகப் பொருள்களின் ஆதியே! நின் திருவடிகளை அருளுக! அதாவது திருவடி ஞானத்தை அருள்க! திருவடி இன்பத்தை அருள்க! எம்மைக் காத்தருள் செய்க! முத்தி நெறியறியாத மூர்க்கரொடு கூடாமலும் எறும்புகளால் அரிக்கப்படும் புழுக்களைப் போல், புலன்களால் அரித்து அழிக்கப் பெறாமலும் "நான்" "எனது" என்ற செருக்கால் தலையால் நடக்காமலும் சிந்தையுள் சிவம் வைத்து வாழ்ந்திட அண்ணித்தருள் செய்க! எமக்கு வாழ்நிலையின் முடிவான பேறாகிய நின் செந்தளிர் போன்ற திருவடிகளைத் தந்தருள்க. செம்மை சேர்ப்பதால் செந்தளிர்கள்! "செம்மலர்" என்று சிவஞான போதமும் கூறும்! சிவம் ஆதியாக நிற்றல்போல அந்தமாகவும் நிற்கிறது. உலகம் அனைத்தும் ஒடுங்கும் கடையூழிக் காலத்திலும் உள்ளவன் சிவன். அவனே உயிர்கள் களைப்பாறிப் புத்துயிர்ப்புப் பெறுவதற்குக் கடையூழியில் உலகத்தை ஒடுக்கிப் பின் புதுப்பித்தருளுகின்றான். ஆதலால், சிவனே அந்தம், ஆதி, முதலும் நடுவும் ஈறும் அவனே!

எல்லா உயிர்களின் தோற்றத்திற்கும் காரணம் இறைவனே! எல்லா உயிர்களும் இறைவனிடத்தில் தோற்றம் என்பது படைப்பு என்று பொருள் தராது. தோற்றம் = தோன்றுதல்; புலப்படுதல், "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற திருக்குறளுக்குத் "தோன்றின்" என்ற

சொல்லுக்குப் பொருள் கொள்ளும் பாங்கே இங்கேயும் கொள்ள வேண்டும். அதாவது பலரறிய மக்கள் மன்றத்தில் தோன்றும் பொழுது புகழொடு தோன்றுக. அங்ஙனம் புகழ்பட வாழும் தகுதி பெறாவிடின் தோன்றாதே என்பதுதான் அந்தக் குறளுக்குரிய உண்மைப் பொருள். என்றும் உள்ள உயிர் ஆணவத்தால் கட்டுண்டு செயலற்றுக் கிடந்த நிலை, தோன்றா நிலை. இறைவன் கருணையால் செயற் கருவிகளுடன் கூடிய உடலையும் அறிவுக் கருவிகளாகிய (கரணங்களை) புலன்களையும் கொண்டு அறிவு விளக்கமுறும் நிலையில் தோன்றியதே தோற்றம்.

எல்லா உயிர்களும் பொன்னும் பொருளும் பெற்று வாழும் வாழ்வளிப்பதால் "பொற்பாதம்" என்றார்.

"பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை"

என்னும் நம்பியாரூரர் வாக்கும் அறிக. பொன் வேறு; பொருள் வேறு. பொன் - தங்கம். இன்று பணம் முதலியனவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். பொருள் - நுகர் பொருள்கள். உடலோடியைந்த உயிர்களுக்கு உயிர் வாழ உணவு தேவை; மருந்து தேவை. உடை தேவை. களிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் உரியன தேவை. இவையெல்லாம் நுகர் பொருள்கள். திருவள்ளுவரும்

"பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை"

என்றார். இங்குப் பொருள் என்பது உயிர்வாழ்தலுக்குத் தேவையான உணவையே குறிக்கும்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்"

என்றும் கூறுவர். உணவு, உயிராகாது. உணவால் உயிரைக் கொடுக்கவும் இயலாது. உடலில் உயிரைக் காத்து வைத்து வாழ்வளிப்பது உணவு.

போகம் - இன்பம். மாணிக்கவாசகர் "போகமாம் பூங்கழல்கள்!" என்று பாடுகின்றார். போகம் என்பது விரிந்த பொருளைத் தரவல்லது. போகம் - இன்பம். உயிர்க்குலத்துக்கு இன்பம் தரும் வாயில்களும் இன்பம் தருபவையும் பலப்பல. ஆன்மாக்கள் வளர்ச்சி அடைய அடைய இன்பத் துறைகளும் மாறும். குழந்தைப் பருவத்தில் தேவை விளையாட்டுப் பொருள்கள்; இனிப்பு மிட்டாய்கள்! இளமையில் தேவை கல்வி; கற்றோர் வாய்க் கேட்டல். வாலிபப் பருவத்தில் காதலின்பம். வாலிபப்

பருவத்தில் இன்பத் துறைகள் ஆற்றலுக்கும் தகுதிக்கும் ஏற்பப் பலப்பலவாகிவிடும். சாதனை செய்தல் ஆகியவற்றிலும் இன்பம் காண்பர். முதிர்ந்த - ஆன்ம முதிர்ச்சி நிலையில் இறைவன் கழலேத்தும் இன்பத்தையே இன்பமெனக் கொள்வர். "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே! என்னுடைய அன்பே!" என்றும் மாணிக்கவாசகர் அருளிச் செய்துள்ளார்.

இறைவனுடைய திருவடி யின்பமே இன்பம். உயிர்கள் - ஆன்மாக்கள் அடையும் முடிவிலா இன்பம் திருவடியின்பமேயாம். திருவடியின்பத்தை "ஆனந்த வெள்ளம்" என்று கோவையார் போற்றும்! திருவடியின்பமாகிய ஆனந்த வெள்ளம் வற்றாது; முற்றாது. அந்த ஆனந்த வெள்ளத்தினை வழங்குவதே ஆடவல்லானின் கூத்து!

"பூங்கழல்கள்" - மலரின் தன்மையுடைய திருவடிகள் என்பது பொருள். மலர், மங்கலப் பொருள்; மணமுடையது; தேன்பிலிற்றும் இயல்புடையது; மென்மையானது. ஆணவக் காரிருளினால் கட்டுண்டும் "யான்" "எனது" என்ற செருக்கில் சிக்கிக் கொண்டும் தலையால் நடக்கும் ஆன்மாக்களை, இறைவன் வன்முறையால் அணுகுவதில்லை. இறைவன் ஆன்மாக்கள் செய்யும் பிழைகளையெல்லாம் பொறுத்து ஆள்பவன். மேலும் பிழையெல்லாம் தவிர்த்தும் காத்து ஆள்பவன். பிழைகளைப் பொறுத்தலினும் பிழைகளைத் தவிர்த்தல் பேரறம். என்றும் நினைந்து நினைந்து போற்ற வேண்டிய உதவி. இறைவன் ஆன்மாக்களை ஆணவத்தின் ஆதிக்கத்திலிருந்து மெள்ள யாதொரு சுவடும், களங்கமும், கறையும், நோவும் இன்றி மீட்பதைப் "பையைத் தாமுறுவி" என்பார் மாணிக்கவாசகர். ஆதலால் இறைவன் சிவன், ஆன்மாக்களை மென்மையாக இன்ப வெள்ளத்தில் அழுத்தி ஆட்கொள்வதால் பூங்கழல்கள் என்றார்.

இங்கு திருவடிகளைக் "கழல்" என்றார். வெற்றிச் சிலம்பணிந்த திருவடிகளைக் கழல் என்று கூறுவது மரபு. ஆம்! எம்பெருமான் சிவனின் திருவடிகள் - கழல்கள், உயிர்களை ஆட்கொள்வதில் வெற்றி பெற்றவை. முப்புரம் எரித்து வெற்றி கொண்ட கழல்கள்! சிவன், காலத்தை வென்று விளங்கி ஊழி முதல்வனாக நிற்பவன். ஆதலால், சிவபெருமானின் திருவடிகள் - கழல்கள்!

சமயநெறிக் கோட்பாட்டின் அடிப்படையே பலருக்கு விளங்காதது. நம்மை – உயிர்களைக் கடவுள் படைத்தான் என்றே பலரும் கருதுகின்றனர். ஏன் சில சமயங்கள் அப்படியே கூறுகின்றன. நம்மை – உயிர்களைக் கடவுள் படைத்தான் என்பது அறிவியல் முறையிலும் கூட இசைந்து வராது. கடவுள் பரிபூரணன்; குறைவிலா நிறைவு; கோதிலா அமுது; குறையிலிருந்து நிறை தோன்றலாம். இது பரிணாம வளர்ச்சி. நிறையிலிருந்து குறை தோன்றாது. ஆன்மாக்களுக்கு உள்ள குறைகளை நோக்கின் கடவுள் படைத்திருப்பான் என்று சராசரி அறிவுகூட ஒத்துக்கொள்ளாது. ஆதலால் உயிர்களுக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. உயிர்கள் என்றும் உள்ளவை (Existence) "எல்லா உயிர்க்கும் தோற்றமாம்" என்பதற்குப் பொருள் கொண்டதுபோல, மறைவாகச் செயலின்றிக் கிடந்தவை, செயலுக்குரிய அறிவுக் கருவிகளையும் செயற்கருவிகளையும் பெற்று இயக்கத்திற்கு வருவதே தோற்றம்.

"மூலையிலே கிடந்தேனை"

என்றார் திருமூலரும். உயிர்களுக்கு முடிவும் இல்லை. அப்படியானால் உயிர் வாழ்க்கைக்கு முடிவே இல்லையா? முடிவில்லாமல் இருந்தால் எய்ப்பும் களைப்பும் வந்துவிடும். உயிர்களின் வாழ்க்கைக்கு எல்லை இறைவன் திருவடிகளைச் சார்தலேயாம். இந்த நிலையிலும் சமயங்கள் தம்தம் நிலையில் மாறுபடும். உயிர்கள் திருவடி ஞானம் பெறச் சிவத்தினை அடைந்து திருவடி இன்பத்தை அடைதலே உயிர்களின் வாழ்க்கைக்கு முடிவு. அப்படியானால் திருவடிகளில் உயிர்கள் கலப்பதன் மூலம் தன்னை இழந்துவிடுகின்றனவா? இல்லை! உயிர்கள் – ஆன்மாக்கள் திருவடியின்பத்தில் தன்னை இழந்துவிட்டால் முன் சொன்ன உண்மைக்கு மாறாகிவிடும். அதாவது உயிர்களுக்கு – ஆன்மாக்களுக்கு அழிவு இல்லை என்பதற்கு மாறாகிவிடும். அதாவது உயிர்களுக்கு – ஆன்மாக்களுக்கு அழிவு இல்லை என்பதற்கு மாறாகிவிடும். உயிர்கள் தன்னை இழத்தல், சிவத்துடன் சேர்ந்து தன்னை இழத்தல் என்பது பொருளால் இரண்டாகவும் தன்மையால் ஒன்றாகவும் விளங்குவதேயாம். தன்னை இழத்தல் என்பது தற்போதமிழத்தலேயாகும்; பாலொடு நீர் கலந்தது போல! பாலைக் காய்ச்சினால் தண்ணீர் நீராவியாகிவிடும். அது போலப் பாலொடு நீர் கலந்த நிலைதான் சிவத்தொடு ஆன்மா கலந்த நிலை.

இறைவன் சிவனைக் கண்டறிவார் இல்லை என்பது திருவாசகம். இறைவனைக் கண்ட பிறகுதான் நம்புவது என்பது

சமயநெறிக்குப் பொருந்தாத விவாதம். காண்டல் – கண்களால் காண்பது. கண்களால் காணக்கூடியவன்தான் கடவுள் என்பதை

"புவனியில் சேவடி தீண்டினன் காண்க"

"கண்ணால் யானும் கண்டேன் காண்க"

என்றருளியுள்ளமையால் அறிக. கண்கள் அறிவுப் புலனுடன் தொடர்பு கொள்ளவில்லையானால் காட்சி நிகழ்ந்தாலும் பொருள் புரியாது. பொருளைப பற்றியதாகக் காட்சியமையாமல் போய்விடும். சிந்தனை செய்து தெளிந்து அறிவால் அறிந்து உணர்ந்து அனுபவித்த பிறகுதான் கடவுள், கண் காட்சிக்குப் புலனாகும். இது சமய அனுபவ நெறி!

அறிவு என்பது கல்வி மட்டுமல்ல, கல்வியின் பயனே அறிவு, கற்றவர்களிலும் மூடர்கள் – அறிவில்லாதவர்கள் உள்ளனர். ஒலி நாடாப்போல ஒப்பிப்பர்; அனுபவமும் இருக்காது; செயலும் இருக்காது; ஒழுகலாறும் இருக்காது; நான்முகன் வேதங்களை நன்றாகப் பயின்றவன். வேதங்களுக்கு நாயகன், கலைமகள் நான்முகனின் மனைவி. நான்முகனின் நாவிலேயே இருக்கிறாள். ஆயினும் என்? சமய ஞானம் இல்லையே! பிரணவத்தின் பொருள் தெரியாமல் திருமுருகன் கையால் குட்டுப்பட்டவனாயிற்றே!

நான்முகன் கல்வியின் துணை கொண்டு இறைவன் திருமுடியைக் கண்டு வருவதாகக் கூறினான். சூளுரைத்தான். அன்னத்தின் உருவம் கொண்டு முடியைத் தேடி வானோக்கிப் போனான். திருமால் செல்வத்தின் அதிபதி. திருமகள் கணவன். இறைவன் திருவடியைப் பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலரைக் கண்டு வருவதாகச் சூளுரைத்தான்; பன்றியின் உருவெடுத்தான்; நிலத்தைத் தோண்டிக் கொண்டு கீழ் நோக்கிப் பயணமானான். அறியாமை ஆரவாரம் செய்யும்; அகங்காரம் காட்டும். எப்போதும் அறியாமை மேல்நோக்கிய நிலையிலேயே இருக்கும்! செல்வன் ஒளிவான்; மறைவான்; யாருக்கும் புலப்படாமல் செயல் செய்வான்; செல்வத்தை நிலத்தில் புதைத்து வைப்பான். வரலாறு பொருத்தமாக இருக்கிறது. இறைவன் திருமுடியைத் தேடிப்போன நான்முகன் முடியைக் காணமுடியவில்லை; தோல்வியையும் ஒத்துக்கொள்ளவில்லை. படித்த பேதைகள் – புத்திசாலிகள் என்று தம்மைக் கருதிக்கொண்டிருப்பவர்கள் உண்மையை – இயலாமையை ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

பொருந்தும்படியாகப் பொய்கள் பல சொல்லி அறியாமையை அறிவு என்று வாதிடுவர். சாட்சியங்களும் வைப்பர். நான்முகன் திருமுடியைக் கண்டுவிட்டதாகக் கூறினான். இது பொய். இதற்குச் சாட்சி தாழம்பூ. திருமாலோ திருவடியைக் காண முடியவில்லை என்று ஒத்துக் கொண்டான். செல்வத்தைவிட சமூகத்திற்கு அதிகத் தீமை பொய்யும் சூதும். படித்தவர்களால்தான் இவை வளர்கின்றன. அதனால்தான் பாரதி "படித்தவன் சூது பண்ணினால் ஐயோ என்று போவான்!" என்றான். நான்முகனும் திருமாலும் காணமுடியாத திருவடிகள்!

மக்களே! வேதங்கள் ஓதுவதினால் மட்டும் இறைவனைக் காண முடியாது; அறிய முடியாது; அனுபவிக்க முடியாது. இறைவனை – சிவனைக் காண அன்பு தேவை. ஆற்றல் மிக்க அன்பு தேவை. நினைந்து நினைந்து நனைந்து நனைந்து அழும் அன்பு தேவை.

உயிர்கள் உடலொடு கூடி நிலத்தில் தோன்றியது உய்வதற்காக! உயிர்கள் உய்வதற்காக உடுத்துக்கொண்ட உடையனையது உடம்பு. பிறப்பின் நோக்கம் உய்தல். உயிர் – ஆன்மா, தன் முயற்சியால் மட்டுமே உய்தல் இயலாது. இறைவன் சிவனின் கருணையும் தேவை. இறைவன் சிவன் உயிர்களுக்கு உய்வு அருளுகின்றான். ஆன்மாக்களாகிய நாம் உய்யுமாறு அறிந்து அவ்வழியிலேயே ஆட்கொள்கிறான். உயிர்களை – ஆன்மாக்களை உய்யுமாறு செய்தல் – உடன்பாட்டு நெறிகளின் வழி சென்று மீட்டெடுத்தலேயாம். இறைவன் சிவனின் ஆட்கொள்ளும் நெறியில் எதிர்மறை அணுகு முறையே இல்லை. ஆங்காரம் உயிரின் இயற்கை. அது எதிர்மறை அணுகுதலை ஏற்காது. ஆதலால் உயிர்களின் மனமறிந்து மனத்துள் இருக்கும் கருத்தறிந்து அக்கருத்தினை முடித்து வைத்தே ஆட்கொண்டருள்கின்றான் இறைவன். ஆன்மாக்கள் புறத்தே போனாலும் உடன் வருவான். துரிசுகள் செய்தாலும் உடந்தையாக இருப்பான். முடிவான நிலை ஆட்கொண்டருளுதல்; ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்துதல்; இறவா இன்ப அன்பில் திளைத்திடச் செய்தல். உயிர்களை ஆட்கொண்டருளுதலால் "பொன்மலர்" என்று போற்றுகின்றார்.

தைநீராடல் தமிழ் மரபு. காலப்போக்கில் மார்கழி நீராடல் ஆயிற்று. வைகறையில் மார்கழி நீராடல் பழந்தமிழர் காலம் தொடங்கி இன்றுவரை நிகழ்ந்து வருவது.

வாழ்க்கைப் பொழுதில் வைகறைப் பொழுது நல்ல பொழுது. வைகறைப் பொழுதில் ஆற்றல்மிக்குடைய ஓசோன் உலாப்போதரும். வைகறைப் பொழுதில் சுவாசிக்கும் ஒரு மூச்சு பத்து மூச்சுக்குச் சமம். மூச்சு சுவாசிக்கும் எண்ணிக்கை அடிப்படையில்தான் வாழ்நாள் கணிக்கப்படுகிறது. வைகறையில் எழுந்து நடந்து சுவாசித்தால் - ஒரு தடவை சுவாசித்தால் ஒன்பது மூச்சு மிச்சப்படுத்தலாம். அந்த அளவு வாழ்நாள் வளரும். வைகறைப் பொழுதில் நீர் நிலைகளில் ஓசோன் படிந்து அந்தத் தண்ணீர் மிகுதியும் பயன் தரத்தக்க ஆற்றலுடையதாக விளங்கும். அப்போது நீராடல் உடலுக்கும், உயிருக்கும், உணர்வுக்கும், பத்திமைக்கும் மிகுதியும் பயனளிக்கும். ஆதலால் பயன் நோக்கி மார்கழி நீராடலையும் "போற்றி" என்றார்.

இந்தப் பாடலில் இறைவனின் - சிவனின் தனித்தன்மை போற்றப்படுகிறது. ஐந்தொழிலுக்கும் சிவனே உரியவன். சிவனே முழு முதல்வன். சிவனை அறிவாலும் செல்வத்தாலும் காண இயலாது. அன்பினாலும் தொண்டினாலுமே காணலாம் என்பது பெறப்படும் உண்மை! சிவன் - இறைவன் நம்மையெல்லாம் உய்ய ஆட்கொண்டருளப் பிரார்த்தனை செய்வோமாக! வாழ்வோமாக!

திருவாசகம் நாள்தோறும் ஓதுதலே பிரார்த்தனை. திருவாசகம் ஓதினால் சிவஞானம் சித்திக்கும். திருவாசகத்தை நாள்தோறும் ஓதுக.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடலோர் எம்பாவாய்!

(திருவெம்பாவை-20)

— — — — — — —



தவத்திரு பேரூர் அடிகளார் பெருவாழ்வு

பேரூராதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பெருமான் 31.8.2018 நண்பகல் 12.15 மணியளவில் தமது வழிபாடு கடவுளான அருள்தரு அம்பலவாணர் திருவடிப்பேறடைந்தார். அப்பேராளர் தமிழ் மண்ணில் தோன்றி தமிழ்மொழிக்கும் சைவநெறிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் மக்கள் உயர்வுக்கும் ஆற்றிய திருத்தொண்டுகள் அளப்பரியன.

அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமான் தோற்றுவித்த அருள்நெறித் திருக்கூட்ட இயக்கத்தின் துணைத் தலைவராக, தமிழகத் திருமடங்களின் கூட்டமைப்பான தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் மாநிலக்குழு உறுப்பினராக அதன் துணை அமைப்பான பேரவை அச்சகத் தலைவராக உலகத் திருக்குறள் பேரவையின் துணைத் தலைவராக, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு, கல்விக்குழு, தமிழ்க் கல்லூரிப் பாடத்திட்டக்குழு ஆகியவற்றின் உறுப்பினராக, பேரூர் தவத்திரு சாந்தலிங்கர் திருமடத்தின் நிகரற்ற குருமூர்த்தியாக இன்னும் பல தமிழ்வளர்ச்சி, சமய வளர்ச்சி இயக்கங்களின் உறுப்பினராக, உந்துசக்தியாக விளங்கிய இப்பேரருளாளர் ஆற்றிய திருத்தொண்டுகள் அளப்பரியன. அவற்றையெல்லாம் தொகுத்துரைப்பது அவ்வளவு எளிதானதல்ல. அது ஒரு காவிய வாழ்வு.

அருள்நலம் சான்ற அந்த மாமுனிவரின் வாழ்வு பெருவாழ்வு; அருள் வாழ்வு; தமிழ் வாழ்வு; அவர்கள் அழைத்துச் சென்ற பாதையில் தமிழ்மக்கள் நடந்து பணிபுரிவது ம் பணிகளின் பயனை அவர்கள் திருவடி மலர்களில் வைப்பதும் தமிழர்களின் கடப்பாடு;

பேரூர் அடிகளார் திருவடி மலர்களை சென்னிமேல் வைத்து வணங்கி வாழ்வோமாக!

இத்தகைய அடிகள்பிரான் அருளாட்சி புரிந்துவந்த இத்திருமடத்தின் இளைய அடிகளார் தவத்திரு மருதாசல அடிகளார் அவர்கள் திருமடத்தின் தலைவராக அருட்செங்கோல் ஏற்று எழுந்தருளியிருப்பது மகிழ்வளிக்கிறது. தவத்திரு மருதாசல அடிகளார் சிறந்த கல்வியாளர்; கருணையாளர்; நிரந்தினிது பேசி மக்கள் மனமெல்லாம் சமயநெறியை விதைத்து வரும் பெற்றியாளர். இப்பெருமகனாரின் அருளாட்சிக் காலம் சமய உலகிற்குப் பெரும்பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்களின் திருவடிகளை வாழ்த்தி வணங்கி வரவேற்கிறோம்.

– ஆசிரியர்

செஞ்சியில் குழந்தைகள் தின விழா

செஞ்சி கிளை நூலக வாசகர் வட்டமும், நயம்பாடி உ லகத் திருக்குறள் பேரவையும் இணைந்து ஆத்திசூடி ஒப்பித்த மாணவ மாணவியர்க்கு குழந்தைகள் தினவிழா அன்று (14.11.2018) விருது வழங்கினார். விழாவிற்கு முனைவர் நயம்பு. அருவுடைநம்பி தலைமை வகித்துப் பரிசுகள் வழங்கினர். செஞ்சி வட்ட கல்வி அலுவலர் கா. ரோஸ் நிர்மலா முன்னிலை வகித்தார். நயம்பு, அறிவுடைநம்பி எழுதிய "திருக்குறளில் இலக்கண ஆய்வுச்சாறு" என்ற நூலை மதுரை, உலகத் தமிழ்ச்சங்க இயக்குநர் முனைவர் கா. மு.சேகர் வெளியிட்டார். மேலும் அவர் ஆத்திசூடி ஆழ்கடல் முத்து என்ற விருதை மாணவ மாணவியர்க்கு வழங்கினார்.

மருத்துவர் அண்ணாமலை, திரு. கோபிநாத், புலவர் கோ. தமிழரசன், திரு. ந. கலைச்செல்வன் முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. தே.செந்தில்பாலா வரவேற்புரை நிகழ்த்தினார். இறுதியில் நூலகர் எ. பூவழகன் நன்றி கூறினார். விழாவில் விருது பெற்ற இருநூறு மாணவ, மாணவியரும் அவர்களின் பெற்றோரும் வருகை தந்து சிறப்பித்தனர்.

குன்றக் குடித்தோழர் காண்!

(தமிழாகரர். தெ. முருகசாமி)



1. குவலயம் போற்றும் மகாசந்நி தானத்
தவலரும் பேரூரா தீனம் - நவிலுறும்
சாந்தலிங்கர் தாள்பற்றிச் சார்ந்த சிவப்பேற்றை
மாந்தி மறவோம் மனத்து!

2. சாந்தலிங்கர் சாயல்! சமயப் பொதுமையர்!
மாந்தரை நேசித்த மாமகான்! - ஏந்துபுகழ்
கொண்ட இராமசாமி நல்லடிகள் பேரூர்தான்
கண்ட கடவுள் அவர்!

3. நொய்யல் நதிக்கரையில் நோன்பின் வடிவமாய்
மெய்யர் சிவசாந்த லிங்கரைத் - தொய்வின்றி
அங்கத்தில் கொண்டே அனுதினம் பூசித்தார்!
இங்கின்றி அங்கும் அணைந்து!

4. தாயுள்ளப் பார்வை! தயாள குணச்சீலர்!
நோய்நீக்கும் புண்ணியப் பூஞ்சிரிப்பு! - ஆயும்
மடாலயத் தேரோடே மாத்தமிழ்க்கல் லூரி
வடம்பிடித்தார்! பல்லோர்வாழ் விற்கு!

5. நின்ற தமிழ்த்தொண்டர்! நீள்புகழ் கொண்டேதான்
வென்ற தமிழ்வேள்வி வித்தகர்! - என்றென்றும்
மன்றுபுகழ் சுந்தர சாமிக ளோடேதான்
குன்றக் குடித்தோழர் காண்!

6. மரணமிலா வாழ்வை மகாசந்நி தானம்
அரணாகப் பெற்றதால் அன்னார் - சரண
கமலா லயத்தைக் கருத்தில் இருத்தி
நமவெல்வோம் நாளும் நயந்து!

7. எத்தனை தொண்டு! திருமடம் தாண்டிசெய்த
அத்தனையும் குத்தகையாய்க் கொண்டதுபோல் - மெத்தபுகழ்
நாமமாம் ராமசாமி நல்லடிகள் தம்மையே
நாநிலம் போற்றும் நயந்து!

* நம- ஆன்மாவின் மலங்கள்

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – X

(தமிழாகரர். தெ. முருகசாமி)

தொல்காப்பியச் சொல்லதிகாரச் சிந்தனையோடு சிலம்பைப் பொருத்தி உணரும் தொடர்ச்சியில் இக்கட்டுரை வேற்றுமை பற்றிய கருத்தாடல் வழிக்கதைப் பெருத்தத்தை உணரத் தூண்டுகிறது.

சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். ஒவ்வொன்றற்கும் தனித்தனி பொருள்கள் உண்டு. அவற்றுள் முழுமையாக உணரப்படும் பெயர்ச்சொல் ஐ, ஆல்,கு,இன், அது, கண் என்ற ஓரெழுத்து ஈரெழுத்துச் சொற்களோடு சேரும்போது பொருள் வேறுபடும் நிலையில் இந்த ஓரெழுத்து, ஈரெழுத்துக்களுக்கு வேற்றுமை உருபு எனப் பெயர் பெறும்.

எடுத்துக்காட்டாக முருகன், புத்தகம் – முழுப் பெயர்கள், ஐ சேர முருகனை, என்றும் புத்தகத்தை என்றும் கூறும்போது ஐ என்ற உருபு சேர்ந்ததால் முழுமையான பெயருக்குரிய பொருளின் மாற்றம் தெரிகிறது. இதுதான் மொழி வளர்ச்சிக்கான அடிப்படை இலக்கணக் கூறு.

கூறப்படும் ஆறு வேற்றுமைக்கும் ஒரு பொருளன்றிப் பல பொருள் உள்ளதைத் தொல்காப்பியம் கூறுகிறது. இவை பற்றிய உண்மைகள் உரைநடை, செய்யுள் நடைகளுக்குப் பொதுவாயினும் சிறப்பாகச் செய்யுள் நடையில் ஒரு கூடுதல் உண்மை உள்ளதைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

எந்த ஒரு செய்தி, எந்த ஓர் உருபால் கூறப்பட்டாலும் அச்சொல் அப்பொருளையே அவ்வேற்றுமையால் உணர்த்தும்போது ஓர் உருபு இன்னோர் உருபின் பொருளைத் தந்து நிற்கும் தன்மையைப் பொருள்மயக்கமின்றி உருபு மயக்கம் என்பது இலக்கண முறை.

எடுத்துக்காட்டாக, "மணற்கு ஈன்ற முளை" என்பதில் மணலின்கண் ஈன்ற முளை என்ற பொருள்தான் பெறப்படுகிறது. "கு" என்பது கொடுத்தல் என்ற பொருளில் வரும் நான்காம் வேற்றுமை உருபு. கொடுப்பதைப் பெறுவதாக உள்ள நிலை மணலுக்கு இல்லை என்பதால் மணலின் கண் என்ற ஏழாம் வேற்றுமைக்கான இடப்பொருளில் மணற்கு என்ற சொல் அமைந்துள்ளது. இதில் பொருள்

மயக்கம் இல்லை; உருபு மயக்கம் மட்டுமே உள்ளது. இதைத்தான் தொல்காப்பியர், (வேற்.மயங்.23)

யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

என்றார்.

இந்நூற்பா உருபுகள் பொருள்தருதலைப் பற்றிப் பொதுவாகக் கூறினாலும் அதாவது ஓர் உருபுக்குப் பதிலாக மற்றோர் உருபின் பொருளைப் பொருத்தமாகத் தந்தாலும் தொல்காப்பியர் மற்றொரு நூற்பாவின் வழிச்சிறப்பாக உருபுமயக்கத்திற்கேற்பப் பொருள் மயக்கம் உண்டு என்றதுதான் ஈண்டு சிலப்பதிகாரத்தோடு பொருத்திப் பார்க்கும் சிந்தனைக்குரியதாக உள்ளது.

அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே! (18)

இந்நூற்பா, முன்பு கூறிய வேற்றுமை மயக்கமேயன்றிப் பொருள் மயக்கமும் உண்டு என்கிறது. இந்த அடிப்படையில் சிலப்பதிகாரத்தில் கனாத்திறம் உரைத்த காதைப்பகுதியில் கண்ணகியின் தோழி தேவந்தி, கண்ணகியின் பொருட்டுச் சாத்தனை வழிபட்டுக் கண்ணகியிடம் சென்று "பெறுக கணவனோடு" என்றாள்.

ஈண்டுக் கணவனோடு பெறுக என்றதற்கு அரும்பத உரையாசிரியர், "கணவனோடு கூட்டம் பெறுக" என்றார். பெருமழைப் புலவர் என்பார் "கணவனோடு கூடி வாழ்வு பெறுவாய்" என்றார்.

இவ்வுரையாளர்கள் இருவருமே இளங்கோவடிகள் கூறிய ஓடு என்ற வேற்றுமையுருபை மாற்றாமல் சொல் எச்சமாகக் கூட்டம் என்றும் வாழ்வு என்றும் சேர்த்துக்கூறிப் பொருளை விளக்கினர். இங்ஙனம் கூறியதில் எவ்வித உருபு மாற்றமோ பொருள் மாற்றமோ அமையவில்லை. ஆனால் அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் உருபுமயக்கமாகக் "கணவனைப் பெறுக" எனக் கூறினார். கணவனோடு என்பதைக் கணவனை என்பதாக உருபை மாற்றிப் பொருள் உரைத்தார். இங்ஙனம் மாற்றியதில் தான் உருபு மயக்கமும் பொருள் மயக்கமும் ஒருசேர அமைந்துள்ளன எனலாம். இவ் அமைப்பு

சிலப்பதிகாரக் கதை தழுவிய பாங்கில் பொருத்தமாக அமைந்துள்ளதாகும். கணவனோடு வாழ்வு பெறுக என்பதற்கும் கணவனைப் பெறுக என்பதற்கும் அடிப்படையிலேயே கருத்து வேற்றுமை உண்டு.

சில ஆண்டுகளாகப் பிரிந்திருந்த கண்ணகி கோவலனோடு இனியேனும் கூடிவாழவேண்டும் என்றே தேவந்தி சாத்தனிடம் வேண்டினாள். அவளது வேண்டுதலுக்கேற்ற பொருள்புலப்பாடு பலன் தரவில்லை.

மாதவியைப் பிரிந்து வந்த கோவலன் புகார் நகரில் தங்கி வாழ விரும்பாமல் வந்த இரவோடு இரவாகவே மதுரைக்குப் புறப்பட்டு விட்டான். மாதவியை விட்டுப் பிரிந்த சோகமும் கண்ணகியின் அவலக் காட்சியும் அவனை ஒருசேர வருத்தியதால் அவளோடு அவன் கூடி முயங்கா நிலையில் சூரியன் எழுதற்கு முன்பாகவே யாரிடமும் கூறாமல் புறப்பட்டான். இதைத்தான் மாதவி எழுதியனுப்பிய கடிதத்தில் "இரவிடைக் கழிதற்கு என்" என்பதாகக் காலத்தைக் கணித்தது கோவலனின் பயண விரைவைச் சுட்டியது எனலாம்.

புகாரின் எல்லையைக் கடந்த அளவில் கவுந்தியடிகளைச் சந்தித்த கோவலனும் கண்ணகியும் மதுரையின் புறஞ்சேரி சென்று மாதரியின் வீட்டில் அடைக்கலமாகத் தங்குகின்றனர்.

வழிநெடுகிலும் கோவலனின் புலம்பல்கள் வெளிப்படும் போதெல்லாம் கவுந்தியடிகள் ஆறுதல் கூறியதைக் கேட்ட அளவிலேயே மனவாட்டத்துடனே இருந்தவனுக்கு இல்லற இணை விழைச்சுக்கான எண்ணமே துளிர்க்காதவனாகவே இருந்துள்ளான்.

ஆனால் சிலம்பில் ஒன்றைக்கொண்டு விற்று வரப் புறப்படுகையில் இனி அவன் வரப்போவதில்லை என்பதால் இளங்கோவடிகள்,

கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை
ஒருங்குடன் தழீஇ உழையோர் இல்லா
ஒருதனி கண்டுதன் உள்ளம் வெதும்பி (கொலைக்)

பிரிந்து சொல்வோன் என்றார்.

இளங்கோவின் கூற்றில் கூறப்பட்ட கருங்கயல் நெடுங்கண் என்றதால் அற்றைநாள் இரவும் கூட்டம் இன்மை தெரிவதாகப் பெருமழைப் புலவர் உரை எழுதியுள்ளார்.

மேலும் பிரிந்து செல்லும் நேரத்தில் மாதரி முதலியோர் குரவைக் கூத்தாடச் சென்றதால் கண்ணகி தனித்திருந்தபோதும் பகல் நேரம் என்பதாலும் அவளுக்குத் துணையாக ஒருவரும் இல்லாததாலும் மனம் வெதும்பியவன் கண்ணகியை மெய் தழுவிய அளவில் பிரிந்தானே அல்லாமல் கூட்டமோடு பிரியவில்லை என்பதால் கணவனோடு கூட்டம் பெறுக அல்லது வாழ்வு பெறுக எனத் தேவந்தி கூறிய கூற்று பொருளற்றதாகவே காப்பிய நிலையில் தெற்றெனத் தெரிகிறது. இதன் தொடர்ச்சியில் கோவலனின் பிரிவு பெரும் பிரிவாகவே அமைந்துவிட்டதால் கண்ணகி கணவனோடு வாழ்வு பெறவும் இல்லை எனத் தெரிகிறது.

இந்நிலையில் "கணவனைப் பெறுக" என உருபு மயக்கமாகக் கூறியதில் கதை தழுவிய பொருத்தம் தெரிகிறது.


தேவந்தி கண்ணகியைக் கணவனைப் பெறுக என்ற அளவிலேயே கோவலனும் மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியை அடைகிறான். அவள் கணவனைப் பெறுகிறாள் என்பதுதான் மறுவாசிப்புப் பொருள்.

கணவனைப் பெற்ற அளவில் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற கருத்திற்கு இடம் இல்லாத வகையில் துன்பியலின் உச்சத்தை இளங்கோவடிகள் வார்த்தைகளால் வடித்தார்.

கணவனைப் பெற்றும் கூடி முயங்காததைப் போலவே தொடர்ந்து வாழும் சூழலையும் அவள் பெறவில்லையாயினும் காப்பியத்தின் நோக்கத்திற்கேற்ப உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தப்பெற்ற பெருவாழ்வைப் பெற்றாள். உலகிற்கு ஓங்கிய ஒருமாமணியாய் சேரநாட்டில் மட்டுமின்றிக் கடல் கடந்த நாடுகளில் எல்லாம் அவள் தெய்வ வாழ்வைப் பெற்றாள். அதிலும் குறிப்பாகக் குன்றக்குரவை பகுதியில் கணவனோடு வானுலகம் பெறும் வாழ்வைப் பெற்றாள். இப்பொருட் குறிப்பெல்லாம் அறிதற்கேற்பவே உருபும் பொருளும் மயங்கியவாறு கணவனோடு பெறுக என்பது கணவனைப் பெறு என்றாயிற்று என்க.

அதிகாரத்தை அடைபவன் அதிகாரத்தில் செருக்கு ஏற்பட்டால் தானாகச் சீரழிந்து போவான். - ஜவகர்லால் நேரு

குலதெய்வமான பென்னி குயிக்!



(கவிவேந்தர். கா. வேழவேந்தன்)

"பென்னிகுயிக்" மனிதரில் ஓர் புனிதர்! பாயும்
பெரியாற்று வெள்ளமெலாம் மேற்கே ஓடித்
தன் வழியில் கடலினிலே கலத்தல் கண்டார்.
தமிழகத்தின் வயிறெல்லாம் வயல்க ளெல்லாம்
பொன்னான நீரின்றி வதையும் போதில்
போய்வீணாய்க் கடல்கலத்தல் தடுக்க வேண்டி,
அன்றாண்ட கம்பெனியார் அரசி டத்தில்
ஆணைபெற்றே அணைகட்டத் தொடங்கிவிட்டார்!

அன்றோர்நாள் பெய்தபேய் மழையி னாலே
அணைமுற்றும் காட்டாற்றில் அடித்துச் செல்ல,
கன்றிழந்த பசுவைப்போல் கண்ணீர் விட்டார்;
கதறினார்; அணைமீண்டும் கட்ட வேண்டி
மன்றாடிக் கெஞ்சினார்; மறுத்தார் ஆண்டோர்!
மாணிக்கச் செம்மலவர் இலண்டன் சென்று,
தன்சொத்து, தன் மனைவி சொத்தை விற்றே
தரத்தோடும் திறத்தோடும் அணைமு டித்தார்!

ஐந்துமா வட்டத்தின் உழவ ரெல்லாம்
அவராலே பசிதீர்ந்தார்; செழிப்பைப் பெற்றார்!
சிந்தையெல்லாம் பென்னியினை ஏற்றிப் போற்றி
தெய்வத்துள் குலதெய்வம் ஆக்கிக் கொண்டார்!
வந்தார்கள்; ஆண்டார்கள் பலரோ ஆனால்
வரலாறாய் வாழ்பவர்கள் இவர்போல் உண்டா?
எந்திரம்போல் வாழாமல் இவர்போல் வாழ்ந்தே
எப்படியும் புகழ்ச்சுவட்டைப் பதித்துச் செல்வோம்!

சேக்கிழார் வழியில் கம்பர் – ஓர் ஒப்பீடு

(திருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

சேக்கிழார் பெரியபுராணம் முதற்குலோத்துங்கன் காலம் என்றும் கம்பரின் கம்பராமாயணம் மூன்றாம் குலோத்துங்கன் காலம் என்றும் வரையறுப்பர். எப்படியோ? சேக்கிழார்க்கு ஐம்பது ஆண்டு பிற்பட்டவர் கம்பர்.

சேக்கிழாரின் திருப்பாடற்தாக்கம் கம்பராமாயணத்தில் விரவி இருப்பதை திரு. பாவலர் மன்றவாணன் "முன்னும் பின்னும்" என்னும் நூலில் பதிவு செய்துள்ளார். அதுபோல பாலூர் திரு. கண்ணப்ப முதலியாரும் தொகுத்துள்ளார். இங்கு மன்றவாணர் பதிவுகளை நன்றியுடன் பதிவு செய்வேன்.

1. சேக்கிழார் புராணத் தொடக்கமாக அம்பலவாணரைத் துதிப்பார்.

"உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

இப்பாடலை வழிமொழியும் கம்பரின் முதற்பாடல் "உலகம்" என்றே தொடங்குகிறது. "அலகில்" என்ற சொல்லை, கம்பர் "அலகிலா" என்று ஆட்சிப்படுத்திப் பாடுவார்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையா ரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண்நாங்களே"

என்ற கம்பர் பாடலில் சொற்கள் பொதுவாக எவர்க்கும் இடத்திற்கேற்ப அமைத்துக்கொள்வதே அவரவர் ஆற்றலுக்குரியன.

2. சேக்கிழார் விநாயகர் வணக்கப் பாடல் :

"எடுக்குமாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவிநீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்"

இப்பாடலில் கம்பரும், சேக்கிழார் கூறிய "மாக்கதை" என்னும் தொடரை இராமகதையுள் அமைத்து, அரங்கேற்றம் செய்த பாடல் எண்ணத்தக்கது.

"நடையின் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்
அடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர் வயிற்றந்ததே"

என்ற பாடலில் "மாக்கதை" சேக்கிழாரின் நன்கொடையாம்.

3. சேக்கிழார் அடியார்கள் புகழைக்கூறும்போது, அடியார்கள் அளவில்லாத பெருமையுடையவர்கள், அவர்களது புகழை ஆசை தூண்டப்பாடுகிறேன்; என்றும், ஒரு பெரிய பாற்கடலைக் கண்ட, ஓர்ஆசை பிடித்த நாயானது, இதனை "முழுமையும் குடித்துவிடுகிறேன் பார்" என்றும் சொல்வது போலாம், என்றும் அப்படி அடியார் புகழினை முற்றிலும் சொல்ல முடியாதென்றும் உவமை காட்டி விளக்கும் பாடல்கள் கம்பர் உளத்தைக் கவர்ந்தன.

அப்பாடல்கள் :

"அளவிலாத பெருமையர் ஆகிய
அளவிலாவடியார் புகழ் கூறுகேன்
அளவு கூடவுரைப் பரிதாயினும்
அளவிலாசை துரப்ப வறைகுவேன்.

தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர்தம்
பெருவருஞ்சீர்ப் புகலலுற்றேன் முற்றப்
பெருகு தெண்கடல் உற்றுண்பெறுநசை
ஒருசுணாங்கனை ஒக்குந்த கைமையேன்"

இவ்விரு பாடல்களின் கருத்தைக் கம்பர் உள்வாங்கி அவற்றைச் சிறிது மாற்றி, சேக்கிழார்தம்மை "நாய்" என்று கூறியதை, கம்பர் தம்மைப் "பூனை" என்று கூறிக்கொள்வார். சுருங்கச் சொல்லி விளக்கும் கம்பர் பாடல் காணத்தக்கது.

"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றுபு நக்குபு புக்கென
ஆசைபற்றி யறையலுற்றேன் மற்றிங்கு
ஆசில் கொற்றத்துஇராமன் கதையரோ? என்ற பாடலில், "பூசை" என்பது பூனையையும், சேக்கிழார் பாடலில் "சுணங்கன்" என்பது நாயையும் குறிக்கும்.

4. சேக்கிழார் காவிரியாற்றை வருணிக்கும்போது, மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றும் ஆறுகளில் முதன்மையானது என்றும், பூமிகளுக்குச் செவிலித் தாய் போன்றது என்றும், உயிர்களை எல்லாம் வளர்த்து நீராகிய அமிர்தத்தை ஊட்டவல்லது என்றும் பாடுவார்; அப்பாடல்:

"சையமால்வரைபயில் தலைமைசான்றது
செய்யபூமகட்கு நற்செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளிக்கும் அமுதாம்"

என்று குறிப்பிடுவோர். கம்பர், சேக்கிழார் ஆற்றைத் தாய் என்று கூறியதை மனத்தகத்துக் கொண்டார்; சரயுநதியை வருணிக்கும் போது, ஆற்றைத் தாய்முலை என மாற்றி அமைத்துக்கொண்டார். வளர்க்கும் முறையில் இரு உவமைகளும் பொருத்தமானவையே. கம்பர் பாடல் :

"இரவி தன்குலத்து எண்ணில் பல்வேந்தர்தம்
பரவு நல்லொழுக்கின்படி பூண்டது
சரயுவென்பது தாய்முலை யன்னதுஇவ்
உரவுநீர் நிலைத்தோங்கு முயிர்க்கெலாம்"

என்ற இப்பாடலில், சேக்கிழார் சொல்லும் முடிபாகிய, "சான்றது" "போன்றது" "நீரது" என்பனபோலவே, கம்பரும், "பூண்டது" "அன்னது" என்று வழிமொழிவார்.

5. சிறுத்தொண்டர் வரலாற்றில், பைரவர் வேடம் பூண்ட சிவபெருமான், நரமாமிசம் ஐந்தாண்டு பிராயத்ததாகவும், உடல் உறுப்புகளில் பின்னமிலாததாகவும் இருக்கவேண்டும் என்று அருளியபோது, இவற்றோடு மற்றொன்றும் சொல்லப்போகிறேன். அது நன்கு புண்ணாகியுள்ள நோவுமிகுந்த இடத்தில் வேலைக்குத்தினது போல இருக்கும்; அதாவது மகனைத் தாய் பிடிக்க தந்தை அறுக்கவேண்டும் என்று சிறுத்தொண்டரிடம் அருளிய செய்தி அறிவிக்கும் பாடல் :

பண்புமிக்க சிறுத்தொண்டர் பரவுகண்டு பயிரவரும்
நண்புமிக்கீர் நாமுண்ணப்படுக்கும் பசுவும் நரப்பசுவாம்
உண்பதஞ்சு பிராயத்தில் உறுப்பின் மதுவின்றேலின்னம்
புண்செய் காலில் வேலெறிந்தாற் போலும் புகல்வது ஒன்று

என்றார்.

கம்பர் இத்திருப்பாட்டின் கருத்த உள்வாங்கி தசரதன் வாழ்க்கையிலும், சில காலம் மக்களைப் பிரிந்திருக்க நேரிடுகின்றது. விசுவாமித்திரர் வேள்விப் பாதுகாப்புக்கு இராமனைத் தன்னுடன் அனுப்பக் கேட்கிறார். அதற்கு இராமனை அனுப்ப மனமில்லாமல் - அனுப்புமாறு முனிவர் கேட்ட சொல்லை சேக்கிழார் வழியில் உவமிக்கும் கம்பர் பாடல் ஒப்பிட்டு மகிழத்தக்கதாகும்.

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தால்
எனச்செவியில் புகுதலோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர் நின்று ஊசலாடக்
கண்ணிழந்தான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரங் காலவேலான்"

எனக் கம்பர் தசரதனின் பிரிவுத் துயரை - முனிவர் கேட்ட சொல், புண்பட்ட மார்பில் மீண்டும் மீண்டும் வேல் நுழைந்ததுபோலச் செவியில் சென்றது என்ற உவமை சேக்கிழார் தடப்பதிவாகும்.

6. இளையான்குடி மாறநாயனார் திருத்தொண்டை நாமறிவோம். இறைவன் நாயனார் இல்லம் நோக்கிப் புறப்பட்டார்; புறப்பட்ட போது, தம்மோடு இறைவியையேனும், ஊர்ந்து செல்லும் விடையையேனும் அழைத்துச் செல்லாது சென்றர் - என்பது சேக்கிழார் திருவாக்கு. அப்பாடல்;

மற்றவர் இன்னதன்மையதாக மாலயனான அக்
கொற்ற ஏனமும் அன்னமுந் தெரியாத கொள்கையர் ஆயினார்
பெற்றமூர்வதும் இன்றியே ஒருபேதையாளுடன் இன்றியே
நற்றவத்தவர் வேடமே கொடுஞாலம் உய்ந்திட நண்ணினார்

என்ற இப்பாடலில் வரும் "பேதையாளுடன் இன்றி" எனும் தொடர் இறைவி அருளே திருமேனியாக உள்ளவன் என்பதும், அவள் உடனிருப்பின் தான்

செயப்புகும் கொடுஞ்செயலுக்கு ஒரு சிறிதும் உடன்படாள் என்பதும், ஆதலின் இறைவன் அவளைத் தான் மேற்கொண்ட செயலுக்குத் தடையாகுமெனக் கருதி அழைத்துச் சென்றிலன் என்பதும் தொனிப்பொருளாகும்.

இவ்வுள்ளுறைப் பொருளை நன்குணர்ந்த கம்பர், இத்தொடரை இக்கருத்தைத் தகுந்த இடத்தில் கையாளுகின்றார். இராமன் வாலியின்மீது மறைந்து நின்று, தனது அம்பைச் செலுத்திவிட்டான். அவ்வாறு செலுத்திய அம்பை வாலி, இராமனுடையது என்று அறிந்து கொண்டான். அதற்குள் மறைந்திருந்த இராமன் வாலியின் முன்வந்து நின்றான். நின்ற இராமனை நோக்கி, "ஏ! இராமா! நீ சூரிய குலத்தில் தோன்றியவனன்றோ? அந்தச் சூரியகுலம் அரச தருமத்தையே தனக்கு உடைமைப் பொருளாகக் கொண்டதன்றோ? அப்படியிருந்தும் நீ தருமத்திற்கு மாறாக, மறைந்து நின்று என்மீது அம்பைச் செலுத்தினாயே! இது உன் தவறன்று. ஏனெனில் உன் மனைவியாகிய சீதை இப்போது உன்னுடன் இல்லை. அவள் இருந்திருந்தால், இத்தகைய தகாத கொடுஞ்செயலைப் புரிந்திருக்கமாட்டாய். அவள் இல்லாமையால் நீ இவ்வாறு செயல்பட்டாய்" என்ற சேக்கிழாரின் கருத்தில் தடம்பதித்த கம்பரது பாடல் ஒப்புநோக்கத்தக்கது.

"கோவியல் தருமம் உங்கள் குலத்துதித்தோர்க்கெல்லாம்
ஓவியத் தெழுதவொண்ணா உருவத்தாய் உடைமை அன்றோ?
ஆவியைச் சனகன்பெற்ற அன்னத்தை அமிழ்தில் வந்த
தேவியைப் பிரிந்த பின்னர்த் திகைத்தனைபோலும் செய்கை"

இங்ஙனமாக கம்பர் ஒவ்வொரு காண்டத்திலும் தனக்கு முன்னவரான சேக்கிழாரது சொல்லையும், பொருளையும், கருத்தையும் பெரிதும் எடுத்து ஆட்சிசெய்திருப்பதை ஒப்பிட்டு மகிழலாம்.

நன்னூலாரின்,

"முன்னோர் மொழிபொருளேயன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும் - முன்னோரின்
வேறுநூலை செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்"

என்ற வெண்பாவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக கம்பர் பாடல்கள் திகழ்வதை சேக்கிழார் திருவாக்குகள் மூலம் அறியலாம்.

கலைஞர் ஒருவரே காண்!

(தமிழாகரர். தெ. முருகசாமி)

அஞ்சுகம் முத்துவேலர் ஈன்ற அருமைமகன்!
விஞ்சுபுகழ் வீறு கலைஞர்தான்! - எஞ்சாப்
புகழுடன் பூத உடம்பினை நீத்துப்
புகழுடம் பானார் பொலிந்து!

திருவாரூர்த் தட்சணா மூர்த்தியின் பற்றால்
திருக்குவளை முத்துவேலத் தந்தை - திருமகற்குப்
பேரினை வைத்தாலும் தட்சணா மூர்த்திக்காம்
பேரே கருணா நிதி.

கருணா நிதிதான் கலைஞரா னாரே!
கருணைமிகு எம்.ஆர்.ரா தாவால்! - கருணைமன
அண்ணாவால் தம்பிபெயனப் பட்டதால் பைந்தமிழ்
மண்ணாண்டார் ஐந்து முறை!

இந்தியப் பாராளு மன்றத்தின் தேர்தலில்
தந்திட்ட சூளுரைக் கேற்பவே - வந்த
இனியவை நாற்பதை ஈந்ததால் பெற்றார்
இனியதமிழ்ச் செம்மொழி என்று!

வான்புகழ் வள்ளுவர்க்குக் கோட்டமுடன் கற்சிலை
வான்முட்டத் தானெடுத்தார் வாஞ்சையுடன்! - வானுயரப்
பூம்புகார் சிற்பக் கலைக்கூடம் கட்டினார்!
தாம்ஆண்ட போது தனித்து!

குறளோ வியம்தீட்டிக் கூறுபுகழ் சங்க
உறவான தீந்தமிழ் தந்தார்! - அறமான
தொல்காப் பியப்பூங்கா வைத்த கலைஞர்தான்
ஒல்காப் புகழ்கொண்டார் ஒய்ந்து!

அரசியல் ஆர்ப்பரிப்பாம் ஆடு களத்தில்
உரசல்கள் வந்தாலும் ஊக்க - முரசொலியால்
முத்தமிழ் ஓசை முழக்கி முணுமுணுப்பை
வித்தகம் ஆக்கினார் வீறு!

பகுத்தறிவு என்றதொரு பாதைநடந் தாலும்
தொகுத்தளித்த ராமா னுசர்தான் – வகுத்த
கலைபோல் எவர்செய்தார்? காசினி தன்னில்
கலைஞர் ஒருவரே காண்!

அன்னார் புகழ்வாழி! அண்ணா வழிவந்த
அன்னார் தமிழ்வாழி! அன்னார்போல் – பொன்னார்
வழிவாழி! வாழியவர் நேசித்த தொண்டர்
வழிவழி வாழி வளர்ந்து!

தமிழர் அடையாளம் தண்ணார் கலைஞர்!
தமிழின் அடையாளம் அன்னார் – தமிழ்நூல்கள்
கண்ணார் கலைஞர் மறைந்தாலும் தான்மறையாப்
பண்ணார் பசுந்தமிழ்ப் பேச்சு!

குறிப்பு : கலைஞரின் தந்தை, திருவாரூரில் உள்ள மடப்புரம் தட்சணாமூர்த்தி சுவாமிகளின் பக்தர். அதனால் அந்த சுவாமிகள் பெயரை மகனுக்கு வைத்தார்.

நாளடைவில் கலைஞர் தமிழ் உணர்வு மேலீட்டால் பெயரை மாற்ற நினைத்தபோது தந்தையார் வைத்த பெயரைச் சிந்தித்தார். தட்சணாமூர்த்தி வரலாற்றைப் படித்தபோது அவருக்குக் கருணாநிதி என ஒரு பெயர் இருந்ததை அப்படியே தமக்குச் சூட்டிக்கொண்டு தந்தையின் எண்ணத்திற்கு ஓரளவு இடம் கொடுத்த வகையில் கருணாநிதி எனத் தம்மை மாறிக் கொண்டார் – என்பது கலைஞர் வரலாறு. இதனால் அவர்தம் சொந்த ஊர் போகும் போது மடப்புரம் வழியாகவே அந்த தட்சணாமூர்த்தி கோயில் கோபுரத்தைப் பார்த்துக்கொண்டே போவாராம்.

தூத்துக்குடி திரு.தரும. ராமச்சந்திரன் மறைவு

அருள்நெறித் திருக்கூட்ட இயக்கத்தின் மூத்த திருத்தொண்டர் தூத்துக்குடி திரு. தரும. ராமச்சந்திரன் அவர்கள் 3.5.2018 அன்று காலமானார் என்ற செய்தியறிந்து "மக்கள் சிந்தனை" வருந்துகிறது. அவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்துள்ள அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. மறைந்த தரும. ராமச்சந்திரன் அவர்களின் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

கலைஞரின் நினைவுகள்

குடிசையில் உருவான செப்புக்கலசம் ஒன்று – இன்று கோபுரத்தின் உச்சியில் தங்கக் கலசமாய் ஏறி நின்று தமிழர்களால் – இல்லை – இந்திய நாட்டின் எல்லாத் தலைவர்களாலும், மக்களாலும் வணங்கப்படுகிறது. இந்த நாள் 7, 8.8.2018 வரலாற்றைத் தொட்டு வணங்கும் நாளாகி விட்டது. இதுதான் தமக்குவமை இல்லாத தலைவர் கருணாநிதியின் வரலாறு.

பெரியார் பாசறை கலைஞருக்குத் தாயகம், அறிஞர் அண்ணாவின் பாசறை அவருக்கு நூலகம், தாய்த்தமிழும், தமிழ்நாடும், தமிழர்களுமே கலைஞரின் புத்தகம், கலைஞர் குறளோவியம் வரைந்தார்; சங்கத்தமிழ் தந்தார்; தொல்காப்பியப் பூங்காவில் உலா வந்தார்.

கலைஞர் உதயசூரியனாய் உதித்தவர். இன்று, இந்திய நாட்டின் இதய சூரியனாய் முத்திரை பதித்தவர். ஓய்வறியாத உழைப்புக்கும், சாய்வறியாத சாதனைகளுக்கும் கிடைத்துள்ள வெற்றி இது. மாநிலத்தில் சுயாட்சி – மத்தியிலே கூட்டாட்சி என்பது அவர் கண்ட – ஏற்றுக் கொண்ட மந்திரச் சொல். காற்றிலே கரைந்து போகாமல் இந்தக் காந்தச் சொல்லைக் கலங்கரை விளக்காக ஏற்று...

வழி நடப்போம்.... வாகை சூடுவோம்.

– திருவள்ளுவர் மன்றம், இராசபாளையம்

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் “மக்கள் சிந்தனை” மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். “மக்கள் சிந்தனை”யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

தூத்துக்குடியில் கலைஞரின் புகழுக்கு வணக்கம், புகழஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கலைஞரின் புகழுக்கு வணக்கம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆளுமை எனும் தலைப்பில் புகழஞ்சலி கூட்டம் உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் சார்பில் பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரி, முன்னாள் முதல்வர் சவகர்லால் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடி மாவட்டக் கிளையின் செயலாளர் முத்துநகர் மோ. அன்பழகன், ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் பொ. சக்திவேல், ஓய்வுபெற்ற சார்ஆட்சியர் செ. சனார்த்தனன், தமிழ் அறம் ஆசிரியர் மருத்துவர் (டாக்டர்) த. இராசலிங்கம், சைவநெறி இதழ் ஆசிரியர் காந்தி, வணிகர் சீ. தனபாலன், கவிஞர் பா. செல்வராமன் ஆகியோர் புகழஞ்சலி செலுத்தி உரையாற்றினார்கள். கவிஞர் இளமுருகு நன்றி கூறினார்.

உலகத்திருக்குறள் பேரவையின் மாவட்டத் தலைவர் பேராசிரியர் குருலெட்சுமி தலைமையில் தூத்துக்குடி ஏ.சி.பி.மகாலெட்சுமி கல்லூரியின் மாணவிகள் பொன் அமிர்தவள்ளி, செயபுனிதா இராசேசுவரி, மாரிச்செல்வம், பேச்சிகுட்டி ஆகியோர் வள்ளுவம் குறித்து உரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் சுப்புலெட்சுமி, அறிவு செல்வம், ஆசிரியர் தேவிகா பொன்னம்பலம், தனராசு, தபராசு, தனபால், சபரிநாத், கோபால், முத்துசுந்தரம் மற்றும் தமிழ் அமைப்பினர் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டு முன்னாள் முதல்வர் கலைஞருக்கு புகழஞ்சலி செலுத்தினார்கள்.

– முத்துநகர் மோ. அன்பழகன்

முயற்சியுடைய வாழ்க்கையில் வரும் இடர்கள் – வெற்றியைத் தடுத்துவிடாது. இடர்கள் வேறு – இயலாமை என்பது வேறு. இடர்களையே இயலாமை என்று கருதுகிறவர்களால் – காரிய சாதனை செய்ய இயலாது.

– அருள்நெறித்தந்தை

சாமானியர் கலைஞர் நினைவலைகள்

(புலவர். தா. குருசாமி தேசிகர்)

சாமானியர் கலைஞரென விருதீந்தார் அடிகள்!
சாமானியர் செய்தளித்த சின்னங்கள் சீரிய!
ஆமாறு நாடாண்ட பல்லாண்டில் கலைஞர்
ஆண்டவர்களில் தமிழாண்டோர் இவர்ஒருவர் ஆதலின்
போமாறே இல்லாத பெரும்புகழைப் பெற்றார்
புகலான பெருநகரில் மேம்பாலம் பலவும்
சாமாறே இல்லாமல் சான்றளிக்கும் புகழை!
செயற்கரிய வள்ளுவரின் கோட்டமிவர் தேட்டம்!

வருகைதரும் எல்லோர்க்கும் முகநட்பில் வல்லவர்
வண்டமிழின் பண்பாட்டை அகம்நட்டுக் காத்தார்!
பெருகிவரும் அயற்பண்பைப் புறந்தள்ளிப் புலனில்
புலப்படுத்தும் தமிழ்ப்பண்பு கோலோச்ச வாழ்ந்தார்!
அருள்தந்தை அடிகளாரை நேசித்தார்! அரசில்
அரும்பங்கு பெறவைத்தார்! யார்செய்வார் இதனை?
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன்
என்றமொழி சமத்துவமாம் ஊர்கண்டார் ஏந்தல்!

அப்பாலும் அடிச்சார்ந்த பெரியோரைப் போற்றி
அரும்பெயரால் மகனுக்கும் ஸ்டாலினெனச் சூட்டி
எப்பாலும் யாவருமே கேளிரெனக் காட்டி
ஏற்றமிகு சிந்தனைகள் புதுமைநிலா பூக்க
இப்பாலும் வரச்செய்தார்! பூம்புகார் குமரி
இவர்கண்ட கோபுரங்கள்! வள்ளுவரை உணர
எப்பாலும் உணர்ந்திடவே உரைகண்டார்! நெஞ்சிலே
எப்போதும் நீதிகாண வழிசெய்தார்! வாழ்க!

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

தொண்டால் உயர்வோம்

(முனைவர்.கடவூர். மணிமாறன்)

அறம்பொருள் இன்பம் மூன்றை
அழகுறப் பாடி யுள்ள
திறத்தினர்; நன்மை தீமை
தெரிந்துமே தெளிந்து வாழும்
சிறப்பினை உணர்த்து கின்ற
செவ்விய அறநூல் ஆன
குறளினால் வள்ளு வர்தாம்
குன்றெனத் திகழு கின்றார்!

பொய்யுமே கூடா; வேண்டாப்
புலாலும் மறுப்பீ ராக!
செய்வன அறிந்து செய்க;
சினத்தினை மறப்பீர்; இன்னா
செய்வதும் குற்றம், என்றும்
சிற்றினம் சேர்தல் வேண்டா;
உய்ந்திடும் வழிகள் தேர்ந்தே
ஒழுக்கமாய் வாழ்வீர் என்றார்!

நட்பினை ஆய்ந்து கொள்க;
நன்றியை மறத்தல் கூடா;
ஒட்பமாய்க் கற்றுத் தேர்க;
உறுபழி தவிர்க்க; யாண்டும்
உட்பகை அழிக்கும்; வாழ்வில்
உழவினை மேன்மை செய்க;
கட்குடி வேண்டா; சூதும்
களவுமே தீங்காம் என்றார்!

இன்சொலே மொழிக; நாளும்
ஈகையை அறமாய்க் கொள்க;
வன்செயல் கொடிதாம்; மாற்றார்
வலியினை அறிக; தூய
அன்பினால் அருளால் பண்பால்
அடக்கமாய் வாழ்வோ மாயின்
துன்பமோ நெருங்கா; உண்மைத்
தொண்டினால் உயர்க என்றார்!

வளமான வாழ்க்கைக்கு...

வளமான வாழ்க்கைக்கு இன்றியமையாதது நோயின்மை, அதாவது பிணியற்ற வாழ்க்கை. நோயென்பது இயற்கையன்று; செயற்கை! அதாவது மனிதர்களே வரவழைத்துக் கொள்வது நோய். இயற்கையோடிசைந்து வாழ்ந்தால் நோய் வராது. நமது உடல் எளிதில் நோய் அடைய முடியாத அற்புதப் படைப்பு; ஒரோ வழி நோய் வந்தாலும் தனக்குத்தானே நோய் நீக்கிக் கொள்ளவும், புதுக்கிக் கொள்ளவும் கூடிய ஆற்றலுடையது; அமைப்புடையது. ஆயினும் தொடர்ந்து உடலியற்கைக்கு மாறாக அதனை எதிர்த்துத் தகாத வழியில் வாழ்க்கை நடத்துபவர்களே பிணியை வரவேற்றுக் கொள்கிறார்கள். நற்காற்றும் கதிரொளியும் நறுநீரும் உடலுக்கு இன்றியமையாத தேவை. இவற்றை முறையாகத் தூய்மையானதாக உடலுக்குக் கிடைக்கும்படி செய்தால் நோயின்றிப் பல ஆண்டுகள் வாழலாம். ஆதலால், காற்றிலும் கதிரொளியிலும் தோயத் தக்கவாறு உலாவுதல் வேண்டும். உடல் உழைப்புக்குரியது. உழைக்காத உடல் நோய்க்கு இரையாதல் தவிர்க்க முடியாதது. ஆதலால், உடம்பு வருந்தத்தக்க அளவுக்கு அதற்கு உழைப்பு கொடுத்தாக வேண்டும்.

வீடு - அலுவலகம் - அலுவலகம் - வீடு என்றிருப்பவர்களுக்கு நோயின்றி வாழ்தல் எங்ஙனம்? ஒரு நாளைக்கு குறைந்த அளவு எட்டு கிலோ மீட்டர் தூரமாவது நடக்க வேண்டும். அல்லது வீட்டுத் தோட்டத்தில் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய காய்கறித் தோட்டம் அமைத்தாவது வேலை செய்ய வேண்டும். தங்கள் வேலைகளைத் தாங்களே செய்து கொள்ள வேண்டும்.

அடுத்து, முறையாகக் குறித்த காலத்தில் உடலுக்கு நலம் பயக்கும் உணவை உண்ணவேண்டும். உடலுக்கு, இயற்கை அன்னை தரும் உணவு நல்லது. உணவில் அரிசியைக் குறைத்து, காய், கனி, கீரை, பருப்பு வகைகளை மிகுதியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய உணவை, உடலின் தேவை கருதி உண்ண வேண்டும். உடலின் தேவையாவது உயிர் வாழ்தலுக்குரிய அடிப்படைத் தேவை.

- அருள்நெறித்தந்தை

(ஆலயங்கள் சமுதாய மையங்கள் பக்.158-59)

சிறப்பாசிரியருக்கு கடிதம்....

மக்கள் சிந்தனையில் "அணையாவிளக்கு"த் தலையங்கம், இளைஞர்களுக்குப் புணையான தலையங்கமாகும். "காயப்பட்டு, சேதப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்ட அருமைத் தமிழ்மொழியை செம்மொழிச் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்த பெருமை முத்தமிழறிஞர்க்கே உண்டு" என்று அடையாளங்காட்டி எழுச்சிபெறவைத்த எழுத்துகள் அணையா விளக்காகும். திரு. முருகசாமி தமிழ்ச்சாமியாகி பதிவு செய்யும், அவள், அவன், இவள் சொல்லாய்வு நயம் - நுட்பம் - "தீதிலா வடமீன்" "செவ்வேள்" என்ற தொடர்கள், ஆய்வு செய்து வழங்கும் கருத்துகள் தமிழின்பம் சொட்டுவதாகும். "தொல்காப்பியத்தின் வழி" "மதிநுட்பம்" நூலோடு உரைகாணும்"ஆழ்ந்த புலமையுடையாரை வியக்க வைக்கும்". அதுபோலச் சாக்கோட்டை நாயனார்க்கும், தொல்லாணை நல்லாசிரியர் துணைகொண்டு நாயனார்க்கு நலங்கூட்டுவது தமிழ்ச்சாமி புலமை வியக்க வைத்தது. முனைவர் நோயல் நினைவுகளைச் சித்திரப்படுத்திய விசித்திரம் உணர்வுகளை நனையவைத்தது. மகான்களையும் மக்களையும் நினைவூட்டும் மக்கள் சிந்தனை இதழ்.

- தருமையாதீனப்புலவர். தா. குருசாமிதேசிகர்

1. 2018 சூன் - ஆகஸ்ட் இதழ் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் புகழ் அஞ்சலியாகவே இருந்தது.
2. அடிகள் முத்தமிழ் அறிஞருக்கு வழங்கிய விருதுப்பாவில் ஆதீனக் கவிஞர் பரமகுரு அவர்கள் கலைஞரைச் சேர சோழ பாண்டியராகக் காட்டிய கற்பனை அற்புதம்.
3. சேதுபதிக்குச் செதுக்கிய பாலசாகித்ய விருதுக்கு மக்கள் சிந்தனை பொற்பூண் பூட்டியதாகப் பாராட்டு இருந்தது.
4. நிற்க, பக்.39ல் சிறப்பாசிரியருக்கான கடிதத்தில் திரு குருசாமி தேசிகர் சுட்டிய அவன் என்ற சொல்லுக்கு அவனி என்ற சொல் பெண்பாலாகும் என்றதற்குக் காட்டிய அவளிவணநல்லூர் என்ற ஊர்ப்பெயர்ச்சொல் பொருளைப் பொருத்தமாகத் தரவில்லை.

அந்தப் பெயர் அவளிவணல்லூர் ஆகும்.

அவளிவண நல்லூர் அன்று.

அவள் + இவள் + நல்லூர் என்று பிரித்தால் அவளி கிடையாது. இந்த உண்மையைத் திருப்பனந்தாள் சம்பந்தர் தேவார மூலநூல் வெளியீட்டின் பக்கம் 499ல் காணலாம். 1941 வெளியீடு.

அவ்வாறே 1955ல் தருமை ஆதீன மூன்றாந் திருமுறை வெளியீட்டின் (பக்கம்) தலவரலாற்றில் 4 ஆவதாக உள்ளதில் அவள் + இவள் + நல்லூர் என்றதோடு இதற்கான கதையும் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே அவனுக்கு அவளி – பெண் பாலாகாது.

–தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி

நமது மக்கள் சிந்தனை ஆவணி இதழில் சமூகத்தின் தலையங்கம் மிகச் சிறப்பாக உள்ளது. அதில் "போராளிகள் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகிறார்கள்" என்பது ஆழ அகலமான தொடர்.

மேலும் விசாக விழாவன்று பெருமான் திருமடத்திற்கு எழுந்தருளிய அருட்காட்சி, நம் வணக்கத்திற்குரிய தமிழ்மாமுனிவர் அவர்களின் திருஅவதாரத் திருநாள் வண்ண நிழற்படங்கள்; சமூகம் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் "தங்க நெல்லிக்கனி" விருது வழங்கியது, திருக்குறட் பேரொளி விருது வழங்கியது, கண்ணகி சிலை மீண்டும் நிறுவியது, நம் குன்றக்குடித் திருமடத்திற்குக் கலைஞர் அவர்கள் வருகை தந்தது, விசாக விழாவில் கோவை க. பழனிச்சாமி, அவர்களுக்கு "அறமனச் செம்மல்" பட்டம் அளித்தது ஆகிய வண்ண நிழற்படங்கள் நேரில் விழாவைக் கண்டு மகிழும் வாய்ப்பில்லாத என் போன்றவர்களுக்கு நிழற்படங்களின் மூலம் மனக்கண்ணில் கண்டு மகிழும் வாய்ப்பளித்தன. கண்டு, எண்ணி மிக மகிழ்ந்தேன். வணக்கம்.

– ஆதீனப்புலவர். க. கதிரேசன், பூவாளூர்

முன்பு கிராமங்களில் கிராம மனிதர்கள் வாழ்ந்தார்கள்! உணவு, உறைவிடம், குடிநீர், தொழில் என்று அனைத்தும் கிராமத்தைச் சார்ந்து வாழ்ந்த வாழ்க்கை முறை இருந்தது! சார்ந்து வாழும் வாழ்க்கை முறை கூட்டுறவு மனப்பான்மையைத் தோற்றுவித்தது! ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காவும் என வாழும் வாழ்க்கை முறை இருந்த்து! உச்சபட்ச தண்டனையாக ஊரைவிட்டு ஒதுக்கிவைத்தல் என்பது மரண தண்டனையைவிட பயங்கரமானதாக கருதப்பட்டது.

முன்பு ஊர் உண்ணும் குளத்தில் நீர் எடுக்க வேண்டும். இன்று வீட்டுக்குள் ஆழ்துளைக் குழாய் மூலம் நீரை உறிஞ்சுகின்றான். செல்போன் சகிதமாய் உலா வருகின்றான். கிராமத்தில் நகர (நரக) வாழ்க்கை வாழ்கின்றான். ஊரைவிட்டு ஒதுங்கி வாழ்கின்றான். குறைந்தபட்சம் வீட்டுக்கு ஒருவர் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால் கிராமப்புறங்களில் தானியப் புழக்கம் மறைந்துபோய் பணப்புழக்கம் வந்துவிட்டது! போதாக்குறைக்கு சாதிப் பிசாசின் அகோர தாண்டவம்!

– பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி எண் : 04577 - 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும்

மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும்

அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி, 2. அழகுக்கலை, 3.லெதர் & ரெக்ஸின் பொருட்கள் தயாரித்தல், 4. பற்றவைப்பு (ஆர்க் & கேஸ் வெல்டிங்), 5.செல்போன் பழுது நீக்குதல், 6. T.V, Radio- பழுது நீக்குதல், 7. எம்ப்ராய்டரி 8. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், 9.வீட்டு வயரிங் வேலை செய்தல், 10. இரண்டு சக்கர வாகனம்பழுது நீக்குதல், 11. ஆபரண நகை தயாரித்தல், 12. திரை அச்சு வேலை, 13. சேலை டிசைனிங், 14. கைவினைப் பொருட்கள் தயாரித்தல், 15.பொம்மைகள் தயாரித்தல், 16. காகித உறை மற்றும் பைகள் தயாரித்தல், 17. வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்குதல், 18. உணவுப் பொருட்கள் தயாரித்தல், 19. பேப்ரிக் பெயிண்டிங், 20. சாக்பீஸ், மெழுகுவர்த்தி, பினாயில், சாம்பிராணி தயாரித்தல் 21. கயிறு திரித்தல், 22. GFRB பொருட்கள் தயாரிப்பு, 23. சேலை புதுப்பித்தல் சுருக்கம் நீக்குதல், 24. எலக்ட்ரானிக் சோக் தயாரித்தல், 25. கூடை முடைதல், 26.உல்லன் நிட்டிங் 27. நாப்கின் தயாரித்தல், 28. தையல் இயந்திரம் பழுது நீக்குதல், 29. போட்டோ லேமினேசன், 30. ஐஸ்கிரீம் தயாரித்தல் 31. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல்,

தகுதி : தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.

பயிற்சி நேரம் : பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.

குறிப்பு : ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பேரூர் சீர்வளர்சீர்
சாந்தலிங்க மருதாசல அடிகளார்
அவர்களின் அருளாட்சி ஏற்பு விழாவில்
சிறப்பாசிரியர் தவத்திரு குன்றக்குடி குருமகாசந்நிதானம் அவர்கள்.





வாசகர்களுக்கு **புத்தாண்டு, பொங்கல், திருவள்ளுவர் திருநாள்** நல்வாழ்த்துக்கள்.

– ஆசிரியர்
மக்கள் சிந்தனை

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Sep - Dec 2018

Price Rs. 8-00
Date of Publication 28-12-2018



கஜா புயல் பாதிப்புக்குள்ளான திருவாரூர் மாவட்டம் கொக்கலாடி கிராமத்தில் நிவாரணப்பணியில் நமது குருமகாசந்நிதானம்.

C129

பெறுநர்

திரு ______

திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி



அச்சிட்டோர் : சண்மு...